வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ஈழநாடு




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 29.04.2023 சனிக்கிழமை | இதழ் : 140 | பக்கங்கள் : 16

வெடுக்குநாறிமலை விவகாரம்:

## சிலைகள் பிரதிஷ்டைக்கு சுமந்திரன் காரணமல்லர்

மறவன்புலவு சச்சிதானந்தம்

யாழ்ப்பாணம், ஏப். 29

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் விக்கிரகங்கள் மீளப் பிரதிஷ்டை செய்வதற்கு சுமந்திரன் எம். பி. காரணமல்லர் என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த மார்ச் 26ஆம் திகதி விக்கிரகங்கள் இனந்தெரியாதோரால் உடைத்து எறியப்பட்டிருந்தன. விக்கிரகங்களை மீள பிரதிஷ்டை செய்வது சிரமமான நிலையில், இது தொடர்பில் வவுனியா நீதிமன்றில் நடந்த வழக்கில் விக்கிரகங்களை மீளப் பிரதிஷ்டை செய்ய நேற்று முன்தினம் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம். ஏ. சுமந்திரன் வாதாடியிருந்தார்.

இந்த நிலையில், நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்ட மறவன்புலவு சச்சிதானந்தன்

15







# வெடுக்குநாறி மலையில் விக்கிரகங்கள் பிரதிஷ்டை

வவுனியா, ஏப்ரல் 29

வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் புதிய விக்கிரகங்கள் நேற்று வெள்ளிக்கிழமை பிரதிஷ்டை செய்யப்பட்டன.

திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தின் குருமுதல்வர் அகத்தியர் சுவாமிகள், யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனத்தின் குருமுதல்வர் வேலன் சுவாமிகள் ஆகியோருடன் பக்தர்களும் அரசியல்வாதிகளும் இணைந்து விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்தனர்.

15

## ஐயரை தாக்கி கொன்றுவிட்டு நகைகள், பணம் கொள்ளை!

முல்லைத்தீவில் நேற்று பயங்கரம்

முல்லைத்தீவு, ஏப். 29

ஐயர் ஒருவரின் வீட்டுக்குள் நுழைந்த கொள்ளையர்கள் அவரை தாக்கிக் கொன்றுவிட்டு 15 பவுண் நகைகள், சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மரணக் கிரியைகளை செய்து வருபவரான அப்பாத்துரை வேலாயுதம் (வயது 69) என்பவரே கொல்லப்பட்டார்.

15

## அரசியலுக்கு அப்பால்பட்டு சகலரும் இணையவேண்டும்!

பிரதமர் தினேஷ் அழைப்பு

கொழும்பு, ஏப். 29

சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பவும், இடைநிறுத்தப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மீள ஆரம்பிக்க முடியும். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சகலரும் அரசியலுக்கு அப்பால்பட்ட வகையில் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய

15

## கோட்டாபய ராஜபக்ஷவுக்காக மாதம் ரூ. 13.2 இலட்சம் செலவு!

கொழும்பு, ஏப். 29

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்காக இலங்கை அரசாங்கம் மாதாந்தம் 13 இலட்சத்து 29 ஆயிரத்து 387 ரூபாயை செலவிடுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று இந்தத் தகவலை வெளி



யிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் ராஜபக்ஷவுக்கு ஒய்வூதியம், எரிபொருள் கொடுப்பனவு மற்றும்

15

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்

## திருத்தங்களின் பின்னர் பாராளுமன்றுக்கு வரும்!

கொழும்பு, ஏப். 29

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மீளாய்வு செய்யப்பட வேண்டும் எனப் பல்வேறு தரப்பினர் வலியு



றுத்தியுள்ளார்கள். சகல தரப்பினரின் யோசனைகளுக்கு

15

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு தீர்வு வழங்குவோம்!

சாகல ரத்நாயக்க யாழில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள ஆணைக்குழு மூலம் வட பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்த அவர், நேற்று வேலணையில் உதவி வழங்

15

## 33 வீதமான பயனாளிகள் சமுர்த்தி பெற தகுதியற்றோர்!

கோபா குழு மூலம் அம்பலம்

கொழும்பு, ஏப். 29

சமுர்த்தி உதவிகளைப் பெறும் குடும்பங்களில் ஏறத்தாழ 33 வீதமான குடும்பங்கள் அந்த உதவிகளைப் பெறுவதற்குத் தகுதியற்றவை. எனினும், இதேயளவு குடும்பங்கள் உதவிகளை பெறத் தகுதி இருந்தும் அவற்றுக்கு அந்த உதவிகள் கிட்டவில்லை என்று அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தெரிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு

15

## 13ஆம் திருத்தத்தை படிப்படியாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை!

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் இந்தியத் தூதுவர் உறுதியளிப்பு

கொழும்பு, ஏப். 29

13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் முழுமையாக படிப்படியாக நடைமுறைப் படுத்துவதை உறுதி செய்வோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் உறுதியளித்துள்ளார் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே.

அத்துடன், நாட்டின் அனைத்துப் பிரச்னைகளுக்கும் இந்தத் தீர்வு வழி வகுக்கும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

15

## ஐ. எம். எவ். ஒப்பந்தம் மீதான தீர்மானம் 95 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது!

தமிழரசு, கூட்டமைப்பு புறக்கணிப்பு

கொழும்பு, ஏப். 29

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் கீழான ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்காக பாராளுமன்றத்தின் அனுமதி கோரி அரசாங்கம் முன்வைத்த தீர்மானம் 95மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்ட சுமார் 300 கோடி டொலர் பெறுமதியான 48 மாத கால நீடிக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான ஏற்பாடு கடந்த மார்ச் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டை அமுல்படுத்துவதற்குத்

15

## இப்படியும் நடக்கிறது...!

சில நாட்களுக்கு முன்னர் வடக்கில் தமிழ் அரசியல் பற்றி தெற்கு எப்படி அறிந்து வைத்திருக்கின்றது என்பதை நண்பர் ஒருவர் தெரிவித் திருந்ததாக உங்களுடன் பகிர்ந்திருந்தேன்.

வடக்கில் யார் என்றே அறியப்படாத ஒருவரை தமிழர்களின் அடுத்த தலைவராக தெற்கு கருதிக் கொண்டிருப்பது பற்றிய அந்த தகவலை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அதாவது வடக்கு நிலைமைகள் பற்றி அறிந்து கொள்வதில் தெற்கு அரசியல்வாதிகள் எவ்வளவு அக்கறை காட்டுகின்றார்கள் என்பதை அந்தச் சம்பவம் நமக்கு உணர்த்தியிருந்தது.

அதுதான் அரசியல்வாதிகளின் நிலை என்றால் தெற்கு ஊடகங்களும் வடக்கு நிலைமைகள் பற்றி எவ்வளவு அக்கறை கொண்டிருக்கின்றன என்பதை அவர்களின் செய்தியிடலில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

இன்றும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஆபிரகாம் சுமந்திரன் அவர்களை, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் என்றே தெற்கு ஊடகங்கள் எழுதி வருகின்றன.

தெற்கு ஊடகங்கள் என்றால், சிங்கள ஊடகங்கள் தான் அப்படி என்றால், தமிழ் ஊடகங்களும் அப்படித்தான் எழுதுகின்றன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழரசுக் கட்சி வெளியேறிய பின்னர், எஞ்சியிருந்த இரண்டு பங் காளிக் கட்சிகளும் மேலும் மூன்று கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு தாங் களே தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு என்று இயங்கி வருகின்றன.

அவர்கள் அப்படி தனித்து இயங்கினாலும் அவர்களும் கடந்த பாராளுமன்ற தேர்தலில் தமிழரசு கட்சி சின்னத்தில்தான் போட்டியிட்டவர்கள். அதனால் அவர்கள் இப்போதும் தமிழரசு கட்சி எம்.பிக்கள்தான்.

விமல் வீரவன்ஸவும் கம்மன்பிலவும் ஏன் டலஸ் அழகப்பெரும மாத்திரமல்ல, மைத்திரிபால சிறிசேனவும் இப்போதும் பொதுஜன பெரமுன எம்.பிக்கள்தான் என்பதுபோல. ஆனால், அவர்களை பெரமுன எம். பிக்கள் என்று தெற்கு ஊடகங்கள் எழுதுவதில்லை.

அவர்களின் தற்போதைய கட்சியின் பெயரைச் சொல் லியே அவர்களைக் குறிப்பிடு கின்றார்கள்.

அதுபோலத்தான், ரெலோ தலைவர் செல்வமும் புளொட் தலைவர் சித்தார்த் தனும் இப்போதும் தமிழரசு எம்.பிக்கள்தான் என்றாலும் அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்கள்.

இதற்கு தெற்கு ஊடகங்கள் மாத்திரம் அல்ல, கூட்டமைப்பும்தான் காரணம். அவர்கள் தமிழரசுக் கட்சியுடன் இருந்தபோது, கூட்டமைப்பை பதிவு செய்ய வேண்டும் என்றும் ஒழுங் கான கட்டமைப்பாக கூட்ட மைப்பு இயங்கவேண்டும் எனவும் கோரிவந்தவர்கள். இவ்வாறான கோரிக்கையை முதலில் பலமாக முன்வைத்ததனாலேயே கூட்டமைப்பிலிருந்து வெளியேற வேண்டிய நிலைக்கு வந்தவர் ஈ. பி. ஆர். எல். எவ்வின் சுரேஷ் பிறேமச் சந்திரன். அதற்குப் பின்னர் ரெலோ வும் புளொட்டும் அதே கோரிக்கையை முன் வைத்தபோது அவரிகளிடமிருந்து தமிழரசு வெளி யேறிப்போனது.

ஆனால், என்ன காரணத்திற்காக கூட்டமைப்பை பதிவுசெய்யவேண்டும், சரியான கட்டமைப்பு வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்களோ, அதே கோரிக் கையை நிறைவேற் றுவதில் அவர்கள் அக்கறை காட் டுவதாகத் தெரிய வில்லை.

உள்ளூராட்சி தேர்தல் அறிவிப்பால் தமிழரசு வெளி யேற மேலும் மூன்று கட்சி களைச் சேர்த்துக் கொண்டு இயங்கத் தொடங்கியபோதிலும் இன்னமும் கட்சிக்கு யார் தலைவர், யார் பேச்சாளர், யார் துணைத்தலைவர்கள் என்பதைத் தீர்மானிக்க அவர்களாலும் இது வரை முடியவில்லை.

அதனால், தெற்கில் ஊடகங்களை தெளிவூட் டவும் கட்சியில் பொருத்தமான பதவிகளில் யாரும் இல்லை.

மீண்டும் ஒரு தேர்தல் அறிவிக்கப்பட்டால் சில வேளை அவர்கள் மீண்டும் பரபரப்பாவார்களோ என்னவோ?!

- ஊர்க்குருவி

# வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 90 ஆயிரம் பேர் வெளியேறினர்!

கொழும்பு, ஏப். 29

90 ஆயிரம் பேர் வெளி நாடுகளில் வேலைவாய்ப்பை பெறுவதற்காக நாட்டை விட்டு அண்மையில் வெளியேறினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 26 ஆயிரம் சாதாரண பணியாளர்களும் 60 ஆயிரத்துக்கும் அதிகமான திறமையான பணியாளர்களும் வெளிநாட்டு வேலைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான அமைச்சர்களின் ஆலோசனைக் குழு கூட்டத்தின் போது இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இந்த சந்திப்பின் போது, வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு பணிப்புரை விடுத்தார்.

தனி நபர்களை வெளிநாடுகளுக்கு வேலைக்கு அனுப்புவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறப்பு ஒதுக்கீடு எதுவும் வழங்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இச்சந்திப்பின் போது தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, தற்போதுள்ள தொழிலாளர் சட்டத்தின் சிக்கல்களை தடுக்கும் வகையில் புதிய ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இதன்படி, ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்டத்தை உருவாக்குவதற்கு பொதுமக்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பெறுவது மே 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

தற்போது பரவலாகவும் சிக்கலானதாகவும் உள்ள நாட்டின் தொழில்துறை சட்டம் ஒருங்கிணைந்த தொழிலாளர் சட்டமாக மாற்றப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்க இது ஒரு அத்தியாவசிய நடவடிக்கை என்றும் தொழிலாளர் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# மருத்துவமனைக்குள் புகுந்தவர்களால் மன்னார் இளைஞர் குத்திக் கொலை!

கொழும்பு, ஏப். 29

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர், கூரிய ஆயுதத்தால் குத்திக் கொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராபுரம் போதனா மருத்துவமனையில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் மன்னார் பிரதேசத்தை சேர்ந்த 24 வயதான இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

தனிப்பட்ட பிரச்னை காரணமாக தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த இந்த இளைஞன் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் இந்த கொலை இடம் பெற்றுள்ளது.

நேற்று அதிகாலை இளைஞன் சிகிச்சை பெற்று வந்த விடுதிக்குள் வந்த ஒருவர் இளைஞனை கூரிய ஆயுதத்தால் குத்தி கொலை செய்தார் என்று மருத்துவமனை பொலிஸார் கூறியுள்ளனர்.

சம்பவம் குறித்து அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வத்திராயன் பகுதியில் வீடு புகுந்து தாக்குதல்!

## இளைஞர் ஒருவர் படுகாயம்

வடமராட்சி, ஏப். 29

வடமராட்சி கிழக்கு வேம்படி வத்திராயன் பகுதியில் இளைஞர் ஒருவன் மீது வீடு புகுந்து தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழன் பிற்பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காயமடைந்த இளைஞன் 1990 அவசர நோயாளர் காவு வண்டி ஊடாக பருத்தித்திறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த இளைஞன் அருகிலுள்ள நரசிம்மர் ஆலயத்துக்கு செல்லும்போது தாக்குதல் நடத்தியவர்கள் அவரை நாளாந்தம் கிண்டல் பண்ணி வந்ததாகவும்,அந்நிலையில் நேற்று முன்தினம் அவர்களே வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாய், தந்தையை இழந்த நிலையில் குறித்த இளைஞனும் அவரது சகோதரனும் மட்டுமே வீட்டில் வசித்து வந்துள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளானவரின் சகோதரன் தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்று வருவதாகவும், இதனால் காயமடைந்த இளைஞர் நேற்றுமுன்தினம் வீட்டில் தனியாக இருந்த போதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும், அவரை அவரது அயலவர்களே மீட்டு 1990 நோயாளர் காவு வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு அனுப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-02)

## ஷஷி வீரவன்ஸவின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஏப். 29

ஷஷி வீரவன்சவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணையை எதிர்வரும் மே 2ஆம் திகதி வரை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

சட்டவிரோதமான இராஜதந்திர கடவுச்சீட்டைப் பெற்றதாக ஷஷி வீரவன்ஸ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (ஐ)

## கதிரவேல்பிள்ளை நினைவு பெருவிழா!

கொழும்பு, ஏப். 29

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேல்பிள்ளையின் 116ஆவது ஆண்டு நினைவுப் பெருவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு தம்பசெட்டி சதாவதானி அரங்கில் சதாவதானி கதிரவேல்பிள்ளை சனசமூக நிலையத் தலைவர் பா. கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சற்குணராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் சதாவதானி குருபூஜை தின போட்டியில் முதலிடம் பெற்றோரின் உரைகள், இதனையொட்டி நடத்தப்பட்ட சதுரங்க போட்டியில் வெற்றி பெற்றவர்கள் ஆகியோருக்கான பரிசில்கள் வழங்கலும் சிறுவர் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஐ-02)

ஈழநாடு
Eelanadu
29.04.2023 சனிக்கிழமை
சோபகிருது வருடம், சித்திரை 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கரன்னகொட மீதான அமெரிக்க தடை?

மேல் மாகாண ஆளுநரும் முன்னாள் கடற்படைத் தளபதியுமான வசந்த கரன்னகொடவை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் கறுப்புப் பட்டியலில் இட்டிருக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை உறுதிப்படுத்தும்வகையில் மனித உரிமைகள் மீறலோடு தொடர்புபட்டவர்களின் பொறுப்புக்கூறல் விடயத்தில் அமெரிக்கா தொடர்ந்தும் உறுதியாக இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பேச்சாளர் குறிப்பிட்டிருக்கின்றார். அரசாங்கமோ வழமைபோல் அமெரிக்காவின் தடையை நிராகரிப்பதாகக் குறிப்பிட்டிருக்கின்றது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அரசசார்பற்ற நிறுவனங்களின் தகவல்களின் அடிப்படையிலேயே தன்மீது தடை விதித்திருப்பதாக வசந்த கரன்னகொட தெரிவித்திருக்கின்றார். வசந்த கரன்னகொட தொடர்பில் மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுகள் உண்டு. இந்த நிலையிலேயே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தடை அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது. ஏற்கனவே ஜெனரல் சவேந்திர சில்வாமீது அமெரிக்கா தடை வித்திருக்கின்றது. கனடிய அரசாங்கம், மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷமீது தடை விதித்திருக்கின்றது. அமெரிக்காவின் அணுகுமுறையானது அதன் உலகளாவிய மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பானது. கரன்னகொட குறிப்பிடுவது போன்று அரசுசாரா நிறுவனங்களின் அறிக்கைகளின் அடிப்படையில் இவ்வாறான தடைகளை இராஜாங்க திணைக்களம் மேற்கொள்வதில்லை. எதிர்காலத்தில் இன்னும் பலரின்மீதும் தடைகள் விதிக்கப்பட வாய்ப்பு உண்டு.

இவ்வாறான தடைகள் விதிக்கப்பட்டவுடன் ஆதாரமற்ற குற்றச்சாட்டென்று குரலெழுப்பும் அரசாங்கம் யுத்தம் முடிவுற்று 14 வருடங்களாகிவிட்ட பின்னரும்கூட பொறுப்புக்கூறல் விடயத்தில் முன்னேற்றங்களை காண்பிக்காமை தொடர்பில் பேசுவதில்லை. பொறுப்புக்கூறலை முறையாக முன்னெடுத்திருந்தால் இவ்வாறான தடைகளை தவிர்த்திருக்க முடியும். ஆனால், அதற்கு அரசாங்கம் இன்றுவரையில் முயற்சிக்கவில்லை. குறிப்பாக ராஜபக்ஷக்களின் ஆட்சியின்போது மனித உரிமைகள் தொடர்பில் எவ்வித முன்னேற்றங்களும் காண்பிக்கப்படவில்லை. சர்வதேச கடப்பாடுகளைமீறும் வகையிலேயே ராஜபக்ஷக்கள் தொடர்ந்தும் செயல்பட்டு வந்தனர்.

அமெரிக்க அணுகுமுறை மாறுபட்டது. ஒருபுறம் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் மூலம் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கிவரும் - அதேவேளை, அமெரிக்காவின் பிரத்தியேக அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றது. மனித உரிமைகள்மீதான கரிசனை அமெரிக்க வெளிவிவகார கொள்கையின் அங்கமாகும். எனவே, மனித உரிமைகள் மீதான அமெரிக்காவின் அணுகுமுறை நிரந்தரமானது. ஆனால், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையுடன் அமெரிக்கா இணைந்து பயணிப்பதும் – சிலவேளைகளில் அதிலிருந்து வெளியேறுவதும் அமெரிக்காவில் யார் ஆட்சியில் இருக்கின்றனர் என்பதுடன் தொடர்பானது. உதாரணமாக, குடியரசு கட்சி ஆட்சியில் இருக்கின்றபோது, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையிலிருந்து வெளியேறிவிடும். இது குறித்த கட்சியின் அணுகுமுறை சார்ந்தது. ஆனால், அமெரிக்காவின் மனித உரிமைகள் சார்ந்த அடிப்படையான அணுகுமுறையின் எந்தவொரு மாற்றமும் இருக்காது.

உதாரணமாக, டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான குடியரசு நிர்வாகம் இருந்தபோதுதான் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கறுப்புப் பட்டியலில் இடப்பட்டார். தற்போது பைடன் தலைமையிலான ஜனநாயகக் கட்சியின் நிர்வாகம் இருக்கின்றபோதும் தடைகள் தொடர்கின்றன. எனவே, அமெரிக்காவின் அணுகுமுறை அதன் வெளிவிவகாரக் கொள்கை சார்ந்தது. அரசுசாரா நிறுவனங்களோ அல்லது தமிழ் புலம்பெயர் அமைப்புகளின் கருத்துகளின் அடிப்படையிலோ இவ்வாறான முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. எடுக்கப்படவும் மாட்டாது. ஆனால், உள்ளூரில் மக்களின் ஆதரவை பெறுவதற்காக அரசியல்வாதிகள் இவ்வாறான போலியான பிரசாரங்களை முன்னெடுப்பது உண்டு.

# ‘ஈழநாடு’வின் கருத்துக்கு மறவன்புலவு சச்சி மறுப்பு!

*வணக்கம். 26.4.23 ஈழநாடு தலையங்கப் பத்தியில் பின்வரும் வரி பார்த்தேன்.*

*‘...வடக்குக் கிழக்கில் இந்துத்துவ அணுகுமுறையைக் கைக்கொள்ள முடியும் என நம்பும் ஈழத்துச் சிவசேனையின்*

*தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன்...”*

*நான் ஒரு பொழுதும் நம்பாததை நம்புவதாக நீங்கள் ஊகித்து நிலை நாட்டியிருக்கிறீர்கள்.*

*கொடுமையிலும் கொடுமை.*

*இந்துத்துவம் என்றால் என்ன என்பதை அண்மையில் கன்னியாகுமரியில் வாழும் அறிஞர் அரவிந்தன் நீலகண்டன் ஆங்கில நூலாக வெளியிட்டு இருக்கிறார். நீங்கள் படித்திருப்பீர்கள் என நான் கருதுவது பொருத்தம் அன்று.*

*காந்தி அடிகளோடு இணைந்த குஜராத்தியரான சர்தார் பட்டேல் இந்துத்துவவாதி என அறிவீர்களா?*

*இந்துத்துவக் கொள்கையின் வேர்கள் மராத்திய மன்னன் சிவாஜியிடம் இருந்தே இன்றைய தலைமுறைக்கு வந்ததை அறிவீர்களா?*

*இந்தியாவின் வடமேற்கு எல்லை வாழ் மராத்திய குஜராத்திய இராஜஸ்தானிய பஞ்சாபிய மக்கள் கடந்த ஓர் ஆயிரத்து நூறு ஆண்டுகளாக சந்தித்து வரும் அன்னிய மேற்கைய மதத் திணிப்பு முயற்சியின் விளைவே இந்துத்துவம்.*

*சிந்து நதியும் நர்மதை நதியும் சந்தித்த மதத் திணிப்பாலான இரத்த ஆறுகளின் விளைவு இந்துத்துவம்.*

*கங்கையோ பிரம்மபுத்திரையோ மகாநதியோ கோதாவரியோ கிருஷ்ணையோ பெண்ணையோ காவிரியோ வைகையோ சந்திக்காத இரத்த ஆறுகளைச் சிந்துவும் நர்மதையும் சந்தித்தன. விளைவு இந்துத்துவம்.*

*900 ஆண்டுகால முகமதிய ஆட்சி, 400 ஆண்டு காலப் போர்த்துக்கேய ஆட்சி, 200 ஆண்டுகால ஆங்கிலேயர் ஆட்சி, இவை இந்துத்துவத்தின் விளை நிலம்.*

*இந்துத்துவத்தின் முதல் கதாநாயகன் இந்து மன்னர் ஜெயபாலர். முதல் வில்லன் முகமது கஜினி. இந்துத்துவத்தின் முதல் களம் குஜராத்தின் வேரவில் அருள்மிகு சோமநாதர் திருக்கோயில்.*

*அந்தத் திருக்கோயில் மீது இருந்த மசூதியை அகற்றி அங்கே அருள்மிகு சோமநாதர் திருக்கோயிலின் 1000 ஆண்டு கால அழிவை அகற்றி மீள அமைத்தவர் இந்துத்துவரான சர்தார் வல்லபாய் பட்டேல்.*

*இந்தியாவின் வடக்கிலோ, கிழக்கிலோ, தெற்கிலோ இல்லாத இந்துத்துவ முனைப்பு மேற்கில் உண்டு.*

*ஹைதராபாத் நிசாம், மைசூர் திப்பு சுல்தான் இவர்களைத் தவிர சொல்லும்படியான முகமதிய மன்னர் தெற்கே இருந்ததில்லை.*

*மாலிக் கபூரின் படையெடுப்பு, தொடர்ந்த 60 ஆண்டு காலக் கொடுங்கோல் ஆட்சி தமிழகத்தின் முகமதிய மேல் ஆட்சிக் காலம்.*

*இலங்கையில் முகமது ஆட்சிக்கு இடமே இருக்கவில்லை.*

*இதனாலன்றோ இந்துத்துவம் இந்தியாவின் வடக்கில் கிழக்கில் தெற்கில் இலங்கையில் தீவிரமாக முனைவதில்லை.*

*திப்பு சுல்தானின் கொடுமைகமே கர்நாடகத்தில் பாஜக ஆட்சிக்கு விளை நிலம்.*

*ஹைதராபாத்துக்கு வெளியே நிசாமியின் ஆட்சி பெருகவில்லை. நாயக்கரின் மேலாட்சியே பெருகியது.*

*முகமதிய எதிர்ப்பு அங்கு பெரிதாக இல்லை.*

*தெற்கில் கர்நாடகா தவிர எந்த மாநிலத்திலும் பா. ஜ. க. ஆட்சிக்கு வருவது இப்போதைக்குக் கனவே.*

*வங்காளத்திலும் பீகாரிலும் வட கிழக்கு மாநிலங்களிலும் பா. ஜ. க. கொள்கைகளால் வெல்ல முடியாது. கூட்டணி அமைத்தே வெல்ல முடியும்.*

*இலங்கையில் இந்துத்துவாக் கொள்கைக்கு இடமே இல்லை. இதை அறியாமல் இந்துத்துவக் கொள்கையை இலங்கையோடும் சிவசேனையோடும் ஈழநாடு முடிச்சுப் போடுவது பொருத்தமற்றது.*

*இந்தியாவை ஆள்வது அரசியல் கட்சிகள் என மேம்போக்காகத் தெரிந்தாலும் இறுக்கமான ஆட்சிக் கட்டமைப்பே - ஆட்சி அலுவலர்களே இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.*

*இலங்கையில் புத்தர்களை நம்பலாம். தமிழர்களை நம்ப முடியாது என இந்திய ஆட்சிக் கட்டமைப்பில் உள்ளவர்கள் இறுக்கமாகக் கருதுகிறார்கள்.*

*அத்தகைய கருத்துகளை ஆளும் கட்சியாக எவர் வந்தாலும் அவர்களிடம் ஆலோசனையாக இந்திய ஆட்சி அலுவலர், இந்தியப் படை அலுவலர் சொல்கிறார்கள்.*

*இந்தியாவின் தெற்கெல்லைப் பாதுகாப்புக்குத் தமிழர்களே அரணாவர் என இங்கு உள்ள சிலரின் கூற்று வெறும் மாயை.*

*மத மாற்றத்தைத் தடுக்கும் பணி,*

*சைவக் கோயில்களில் ஆக்கிரமிப்பைத் தடுக்கும் பணி,*


*சைவ வாக்கு வாங்கியை உருவாக்கும் பணி இவையே சிவசேனையின் நோக்கங்கள்.*

*இந்துத்துவா ஈழத்துக்குக் கை கொடுக்கும் எனச் சிவசேனை ஒரு பொழுதும் நம்புவதில்லை.*

*ஈழநாடு ஆசிரியர் குழு புரிந்து கொள்ளவில்லை.*

**-மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஏப்ரல் - 29 சனிக்கிழமை
சோபகிருது வருடம் - சித்திரை 16
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.00
திதி : நவமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை கால் வலி சோர்வு வந்து நீங்கும். சகோதர வகையில் நன்மை உண்டு. வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள்.

**இடபம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**மிதுனம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலை முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதாயம் உண்டு.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அலைக்கழிக்கப்படுவார்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும்.

**சிம்மம்**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வுமனப்பான்மையும் வந்துச் செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும்.

**கன்னி**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வாகனவசதிப் பெருகும்.

**துலாம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டுப் பேசுவீர்கள். உறவினர்கள் நண்பர்கள் வீடு தேடி வருவார்கள் அவசரத்திற்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள்.

**மகரம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். வாகனத்தை சரி செய்வீர்கள்.

**கும்பம்**
குடும்பத்தினருடன் சுப விஷயங்களில் கலந்து கொள்வீர்கள். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். வழக்கில் திடீர் திருப்பம் வரும்.

**மீனம்**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். அநாவசிய செலவை கட்டுப்படுத்துவீர்கள். வியாபாரத்தில் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள்.

### ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான

# 4 இலங்கைத் தமிழர்களும் கொடூர சிறைக்குள் முடக்கம்!

### அவர்களுக்காக குரல் கொடுக்குமாறு அழைப்பு

சென்னை, ஏப். 29

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை கைதிகளாக இருந்து உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்கள் 4 பேருக்கும் இழைக்கப்பட்டுள்ள அநீதி குறித்து உறவினர் ஒருவர் முகநூலில் பதிவிட்டுள்ளார்.

ராஜீவ் கொலை வழக்கில் சிறையிலிருந்த 7 பேரில் 4 பேர் இலங்கைத் தமிழர்கள். தமிழகத்தை சேர்ந்த ஏனைய 3 பேரும் விடுவிக்கப்பட்ட போதிலும், இலங்கைத் தமிழர்கள் தற்போதும் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து ஏற்கெனவே தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள நிலையில், தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரின் உறவினரும் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவு வருமாறு-

கடந்த வருடம் நவம்பர் மாதம் 11ஆம் திகதி (5 மாதங்களின் முன்) முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்டு 32 அண்டுகளாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதாக உச்சநீதிமன்றம் அறிவித்தது.

இந்தியாவைச் சேர்ந்தவர்கள் வெளியே விடப்பட இலங்கையைச் சேர்ந்த முருகன், சாந்தன், ஜெயக்குமார், ரொபேட் பயஸ் போன்றோர் திருச்சி சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டார்கள். சிறப்பு முகாம் என்ற பெயரில் வெளியே கூறப்பட்டாலும் திருச்சி சிறைச்சாலையுடன் இணைப்பிலேயே அதன் வளாகத்துக்குள்தான் வைக்கப்பட்டுள்ளார்கள்.

மற்றையவர்கள் போல இல்லாமல் முருகன், சாந்தன் தனியறையிலும். பயஸ், ஜெயக்குமார் தனி அறையிலும் வைக்கப்பட்டுள்ளார்கள். வேலூர் சிறையில் தண்டனைக் கைதிகளாக இருக்கும் போது பகல் வேளையில் வளாகத்துக்குள் திரிவதற்கும் , உடல்கழிவுகளை வெளியேற்ற அறைக்கு வெளியேயும் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களுக்கு இங்கு குளியலில் இருந்து மலசலம் அனைத்தும் ஒரு அறைக்குள் தான் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

சமையலும் அதே அறைக்குள்தான் செய்து சாப்பிடுகின்றார்கள். இதில் தீவிர ஆன்மீகவாதிகளான மருகனும் சாந்தனும் தமது தியானத்தில் இருந்து பூஜைகளைக்கூட மலசலத்துக்கு ஒதுக்கப்பட்ட அறையின் அதேபகுதியில்தான் செய்கின்றார்கள், அந்த அறையை விட்டு வெளியே வர முடியாமல் ஒவ்வொரு அறைக்கும் 18 பொலிஸார் காவலில் நிறுத்தப்பட்டுள்ளார்கள்.

இரத்த உறவுகளைத் தவிர வேறு எவரும் சென்று சந்திப்பதற்கு அனுமதியில்லை, இது வரை குடும்பத்தாருடன் ஒரு தொலைபேசி அழைப்புக் கூட பேசுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை, சிறைக் கைதிகளைச் சென்று பார்க்கும் மனித உரிமையைச் சேர்ந்தவர்கள்கூட அவர்களைச் சென்று பார்க்கவில்லை, அவர்கள் குடும்பத்தவர்களாக அவர்களை விடுவிக்கக் கோரி மனுக் கொடுக்காத இடங்களே இல்லை. ஆனால், யாருமே கண்டு கொள்ளா நிலையே இருக்கின்றது.

இதில் தீவிர கண் பாதிப்புக்கு உள்ளாகியிருந்த பயஸ் 6 நாள் உண்ணா விரதப் போராட்டம் செய்தும் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. முருகன் மேற் கொண்ட உண்ணாவிரதம் பற்றி எந்த ஊடகத்திற்கும் ஒரு துளிச் செய்தி கூட வெளியாகவில்லை. அந்த 7 பேரில் இறுதியாக எஞ்சிய 4 பேரையும் மன உளைச்சலுக்கு உள்ளாக்கி அந்த அறைகளுக்குள்ளே இறக்க வைப்பதுதான் நோக்கமாகப்படுகின்றது.

அவர்கள் கைதிகளாக இல்லாமையால் எந்தவித சட்ட நடவடிக்கையும் எடுப்பதற்கு வழிசமைக்க முடியவில்லை. 4 பேரின் குடும்பம் சார்பிலும் இவ் வேண்டுகையை வைக்கின்றேன். தூக்குக் கயிற்றில் இருந்து காப்பாற்றியதே ஊடகங்களும் மக்களும்தான். ஆனால், இந்த விடுதலை என்ற பொய் வார்த்தையையும் தகர்த்து உண்மையை உரைத்து அவர்களை சிறை மீட்க உதவும் படி வேண்டி நிற்கின்றேன் - என்றுள்ளது.(ஐ)

# இராமேஸ்வரம் மீனவர்கள் உண்ணாவிரத போராட்டம்!

இராமேஸ்வரம், ஏப். 29

இலங்கை தடுத்து வைத்துள்ள படகுகளை விடுவிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக மீனவர்கள் நேற்று திடீரென உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழக மீனவர்கள் பாக்கு நீரிணை, கச்சதீவு கடற்பரப்பில் மீன்பிடி உரிமை உள்ளது. இந் நிலையில், எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினர் மீனவர்களை கைது செய்கின்றனர். அத்துடன் அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்கின்றனர் என்று தமிழக மீனவர்கள் சாடி வருகின்றனர்.

இவ்வாறு எல்லை தாண்டி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் 70 மீனவர்களின் படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றை விடுவிக்குமாறு தமிழகம், மத்திய அரசுகளுக்கு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று இராமேஸ்வரம் தங்கச்சிமடம் வலசை பஸ் நிலையம் முன்பு மீனவர்கள் திடீர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை தடுத்து வைத்துள்ள படகுகளை விடுவிக்க வேண்டும். மீன்பிடி தடைக் கால நிவாரணமான ரூ. 6 ஆயிரம் உதவித் தொகையை அரசு உடனே வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நடைபெற்றது. (ஐ)

# தி. மு. கவுக்கு எதிராக வியூகம் வகுக்க பா. ஜ.கவிடம் அ. தி. மு. க. இணக்கம்!

சென்னை, ஏப். 29

தி. மு. கவுக்கு எதிராக வியூகம் அமைக்க பா. ஜ. கவிடம் அ. தி. மு. க. இணக்கம் காட்டியதாகத் தெரிகிறது. இதனிடையே, அ. தி. மு. க. விலிருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் கட்சியில் சேர்க்குமாறும் பாராளுமன்ற தேர்தலில் வாக்குகள் சிதறக்கூடாது என்றும் தம்மை சந்தித்த பழனிசாமி தலைமையிலான அ. தி. மு. கவினரிடம் தெரிவித்துள்ளார் பா. ஜ. கவின் மூத்த தலைவர் அமித் ஷா.

அத்துடன், இம்முறை பாராளுமன்ற தேர்தலில் 10இற்கு குறையாத ஆசனங்களை வழங்கவும் அ. தி. மு. க. கட்சி உடன்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும், தொகுதி ரீதியான பங்கீடுகளின்போதே இது விடயத்தில் உறுதியான முடிவு எடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் அ. தி. மு. க. வாக்குகள் சிதறியதாலேயே 32 தொகுதிகளில் தோல்வி ஏற்பட்டது. எனவே, பிரிந்து சென்ற தினகரன், ஓ. பன்னீர்செல்வம் மற்றும் சசிகலா தரப்பினரை சேர்க்க முயற்சி செய்யுமாறும் அமித்ஷா கூறியுள்ளார்.

எனினும், அ. தி. மு. க. அதிருப்தியாளர்கள் பிரச்னையில் தேர்தலுக்கு நெருக்கமாக முடிவு எடுக்கலாம் என பழனிசாமி பதிலளித்துள்ளார். அதிமுக அதிருப்தியாளர்களை எதிர் கொள்ள ஒரு திட்டம் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

# சுயாதீனமாகப் பணிபுரியும் சூழலை பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்குக!

## பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பவ்ரல் கடிதம்

கொழும்பு, ஏப். 29

**பொலிஸ் அதிகாரிகளுக்கு அரசியல் அழுத்தங்கள் இன்றி, சுயாதீனமாக பணிபுரிவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்குமாறு பவ்ரல் அமைப்பு தேசிய பொலிஸ் ஆணைக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருக்கு இந்த விடயம் தொடர்பில் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் அரசியல் தலையீடு காணப்படுவதன் காரணமாக நடுநிலைமை, கௌரவத்தை பாதுகாக்கும் வகையில் செயற்படுவது சிக்கலாகி வருவதாக பவ்ரல் அமைப்பு தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசியல்வாதிகளின் தூர நோக்கற்ற ஆட்சியினால் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையில், பொலிஸ் அதிகாரிகளுக்கு சுயாதீனமாக செயற்படுவதற்குள்ள சந்தர்ப்பம் இல்லாமற்போகுமாயின், சட்டத்தை மதிக்கும் சாதாரண பொதுமக்களும் விரக்தியடைவதைத் தவிர்க்க முடியாது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# எஸ்.எம்.சந்திரசேனவை அச்சுறுத்திய கோட்டாபய

கொழும்பு, ஏப். 29

இரசாயனப் பசளைத் தடைக்கு எதிராகக் கருத்து வெளியிட்டால் அமைச்சுப் பதவியில் இருந்து தம்மை நீக்குவதாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தம்மை அச்சுறுத்தினார் என்று பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாட்டில் உள்ள வைத்தியர்கள் தவறான ஆலோசனைகளை வழங்கினர்.

இரசாயனப் பசளை பயன்பாடு காரணமாக சிறுநீரக நோய் ஏற்படுகின்றது எனவும், இதன் காரணமாக சேதன பசளையைப் பயன்படுத்துமாறும் வைத்தியர்கள் ஆலோசனை வழங்கினர்.

இது தொடர்பாக தாம் வழங்கிய ஆலோசனைகளை கோட்டாபய ராஜபக்ஷ ஏற்கவில்லை-என்றார். (அ)

# தேசிய வெசாக் விழா இம்முறை சிலாபத்தில்

கொழும்பு, ஏப். 29

இந்த ஆண்டு தேசிய வெசாக் விழா சிலாபத்தில் நடைபெறவுள்ளது.

சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கெபல்லாவல்ல சிறி ரதனசிறி பிரிவென் விகாரை ஆலயத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

புத்தசாசன, சமய அலுவல்கள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன இதனைத் தெரிவித்தார்.

வெசாக் வாரத்தை முன்னிட்டு மே மாதம் 2ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் பல சமய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# கோட்டா காலத்தில் இடைநிறுத்தப்பட்ட இலகுரக ரயில் திட்டம் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 29

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் இடைநிறுத்தப்பட்ட இலகுரக ரயில் செயற்றிட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த விசேட நிபுணர்களின் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த செயற்றிட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கான யோசனை நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய அமைச்சின் தேசிய செயற்பாட்டு மையத்தினால் இந்த விடயம் தொடர்பாக அறிக்கை கோரப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை கிடைத்த பின்னர் செயற்றிட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ் சத்யானந்த தெரிவித்தார். (அ)

# ஏ.எல். விடைத்தாள் மதிப்பீட்டு பணிக்கு ஓய்வுபெற்ற ஆசியர்களுக்கு சந்தர்ப்பம்

கொழும்பு, ஏப். 29

க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக ஓய்வுபெற்ற ஆசிரியர்களிடமும் விண்ணப்பங்களைக் கோரப் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்குப் பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர்களிடமிருந்து ஒன்லைன் முறையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌதிகவியல், இரசாயனவியல், கணிதம், விவசாய விஞ்ஞானம், உயிரியல், இணைந்த கணிதம், தொடர்பாடலும் ஊடகக் கற்கையும், வணிக கல்வி, பொறியியல் தொழில்நுட்பவியல், உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல், தொழிநுட்பவியலுக்கான விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் மே 2 ஆம் திகதி வரை ஒன்லைன் ஊடாக உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஐ.எம்.எவ். சகல நிபந்தனைகளையும் அரசு நடைமுறைப்படுத்துவதில்லை

## கூறுகின்றார் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, ஏப். 29

சர்வதேச நாணய நிதியத்தின் அனைத்து நிபந்தனைகளையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்துவதில்லை.

எனினும், நடைமுறைப்படுத்த வேண்டியவற்றை சட்டத்தைக் கொண்டு வந்து அரசு நடைமுறைப்படுத்துமென சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

நாட்டை பொருளாதாரத்தில் கட்டியெழுப்பும் வகையில் அனைவரும் இதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டுமென கேட்டுக்கொண்ட அமைச்சர், பல்வேறு கருத்துகள் நிலவும் நிலையில் அது தொடர்பில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முடியும் என்றும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சர்வதேச நாணய நிதியம் என்பது அமெரிக்காவின் ஒரு வங்கியல்ல. அவ்வாறு எண்ணிக் கொண்டே பலரும் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 196 நாடுகளில் பெருமளவு நாடுகள் அதில் அங்கத்துவம் வகிக்கின்றன. அது ஒரு நிதியம் என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.



அந்த நிதியத்தின் பெரும் பகுதியை அமெரிக்கா கொண்டுள்ளது. அதற்கு அடுத்ததாக ஜப்பான், சீனா போன்ற நாடுகள் உள்ளன.

நாம் சீனாவிடமும் 7 பில்லியன் டொலருக்கும் அதிகமான இருதரப்பு கடனைப் பெற்றுக் கொண்டுள்ளோம். அது பிரத்தியேகமானது.

அவ்வாறு பெருமளவு நாடுகள் அங்கத்துவம் வகிக்கும் நிதியத்திடமே எமது பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை கட்டியெழுப்புவதற்காக நாம் கடன் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டுள்ளோம்.

நாம் சர்வதேச நாணய நிதியத்திடம் 16 தடவைகள் சென்றுள்ளோம்.

இம்முறை நாம் கண்டிப்பாக செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஏனெனில், வேறு எந்த நாடுகளும் எமக்கு கடன் தராத நிலைமையே காணப்பட்டது. கொடுத்த கடன்கள் அத்தனையையும் அந்த நாடுகள் நிறுத்தின. 2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நாடு வங்குரோத்து அடைந்தது. அப்போது அதற்கு ஆதரவாக பேசிய அப்போது அமைச்சரவையில் இருந்தவர்களே இப்போது பல்வேறு எதிர் கருத்துகளை முன் வைக்கின்றனர். நாம் அப்போது அமைச்சரவையில் இருக்கவில்லை.

சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்கின்றமை தொடர்பில் தர்க்கங்கள் காணப்படுகின்றன. அது வேறு விடயம். எமக்கும் சில மாற்றுக் கருத்துகள் உள்ளன.

எந்த வங்கிகளிலும் எந்த நாட்டிலும் கைமாற்று முறையிலாவது கடன் பெற முடியாத ஒரு நிலையிலேயே சர்வதேச நாணய நிதியம் எமக்கு கை கொடுத்தது.

அவ்வாறு அந்த நிதியம் வழங்கும் 2.9 பில்லியன் டொலர் நிதியானது கிடைத்துள்ள நிலையில், இப்போது எமக்கு கடன் பற்றுப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு நிபந்தனை தான் ஊழல் மோசடிகளை நிறுத்துவது. அந்தச் சட்டம் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது- என்றார். (அ)

# சிகிரியா படிகள் சீரமைக்க ரூ. 4 கோடி நிதி உதவி வழங்குகிறது யுனெஸ்கோ!


கொழும்பு, ஏப். 29

சிகிரியா ஓவிய குகைக்கு செல்லும் படிகளை சீரமைக்க 04 கோடி ரூபா நிதியுதவி வழங்க யுனெஸ்கோ தீர்மானித்துள்ளது.

இந்த நிதி அடுத்த மாதமளவில் கிடைக்குமென மத்திய கலாசார நிதியம் தெரிவித்துள்ளது.

அதனூடாக தற்போது சேதமடைந்த நிலையில் காணப்படும் படிக்கட்டுகள் விரைவில் புனரமைக்கப்படும் என மத்திய கலாசார நிதியம் குறிப்பிடுகின்றது.

இதேவேளை, சிகிரியாவில் சுற்றுலாவை மேம்படுத்தும் விசேட திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



சுற்றுலாப் பயணிகள் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகளின் கட்டணத்தை ஒழுங்குபடுத்தவும் சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டுவதற்கும் கட்டண முறைமையை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# முஸ்லிம்களின் உடல்கள் எரிக்கப்பட்டமை தவறு!

## ஏற்றுக்கொண்டார் அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஏப். 29

**கோவிட் தொற்றுக் காலங்களில் முஸ்லிம் மரணங்களை கட்டாயமாக எரித்தமையானது இலக்கணப்படி தவறு என தான் ஏற்றுக் கொள்வதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று பாராளுமன்ற அமர்வில் தெரிவித்தார்.**

"அன்று கோவிட் மரணங்கள் குறித்து கவனம் செலுத்த கொவிட் மரணங்களை எரிக்க, புதைக்க விசேட அதிரடிப் படையினர் குழுவொன்று நிறுவப்பட்டது. அவர்களது அன்றைய விவாதமாக இருந்தது. கோவிட் வைரஸ் நிலத்தடி நீரினால் பரவும் என்பதாகும்.

அது முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாத ஏனைய சகோதரர்களையும் பெரிதும் பாதித்த ஒன்றாகும். அதுவும் ஒரு தொலை தூரத்திற்கு ஓட்டமாவடிக்கு கொண்டு சென்று, அதுவும் அடிப்படையே இல்லாத வெறும் இனவாத அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை நாம் அறிவோம்.

அதனை தாங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா.." என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் பாராளுமன்ற உறுப்பினர் ரவுப் ஹக்கீம் நேற்று கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் கெஹலிய் 'உண்மையில் நான் அப்போது சுகாதார அமைச்சராக இருக்கவில்லை மாறாக அன்றைய காலம் நான் ஊடக அமைச்சராகவே இருந்தேன். உங்கள் கருத்துக்களை நான் மதிக்கிறேன். அது இலக்கணப்படி தவறானது..' எனத் தெரிவித்திருந்தார். (அ)

# 900 சுற்றுலா பயணிகளுடன் இலங்கைக்கு வந்தது கப்பல்




கொழும்பு, ஏப். 29

மலேசியாவில் இருந்து 900 சுற்றுலா பயணிகளை ஏற்றிக் கொண்டு விக்கிங் மாஸ் பயணிகள் கப்பல் நேற்று காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

435 பணியாளர்களைக் கொண்ட இக்கப்பலில் சுற்றுலாப் பயணிகள் கொழும்பு, பின்னவல, கண்டி உள்ளிட்ட இடங்களுக்குச் செல்லவுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த கப்பல் இன்று இந்தியாவுக்கு புறப்பட உள்ளதாக கொழும்பு துறைமுக பயணிகள் முனையத்தின் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

## தினேஷ் ஷாப்டர் மரணம்:

# பொலிஸார், தாதியர் உள்ளிட்ட 10 பேரிடம் டி.என்.ஏ சோதனை!

கொழும்பு, ஏப். 29

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான விசாரணையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள உத்தியோகத்தர்களை, அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் முன்னிலையாகி, இரத்த மாதிரிகளை வழங்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் ராஜீந்திர ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

ஜனசக்தியின் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான டி.என்.ஏ அறிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இரு வெளிநாட்டு உயிரியல் மாதிரிகளை அடையாளம் காண்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட போதே மேலதிக நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஐந்து பேர் மற்றும் பொரளை பொலிஸில் இருவர் அடங்கிய குழுவை டி.என்.ஏ பரிசோதனைக்காக அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனசக்தி குழுமத்தின் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான அறிக்கைகளில் பதிவாகியுள்ள இரண்டு வெளிநாட்டவர்களின் உயிரியல் மாதிரிகளை அடையாளம் காண, டி.என்.ஏ ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக பத்து பேரின் பட்டியலை சி.ஐ.டி கடந்த புதன் கிழமை கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திர ஜயசூரியவிடம் சமர்ப்பித்தது.

தினேஷ் ஷாப்டரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதித்த நபரும் அவருக்கு அவசர சிகிச்சை வழங்கிய தேசிய வைத்தியசாலையின் தாதியர்களும் அந்த பட்டியலில் உள்ளடங்குகின்றனர். (அ)

# ரோஹணவின் குற்றச்சாட்டை விசாரிக்க அமைச்சு ஏற்பாடு!

கொழும்பு, ஏப். 29

தென் மாகாணத்திற்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தனது இடமாற்றத்துக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் சந்திர பெர்னாண்டோவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அமைச்சின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஒருவரை நியமிக்கவுள்ளார்.

சுதந்திரமான விசாரணையை மேற்கொள்வதற்காக பொது நிர்வாக அமைச்சின் சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஒருவரை நியமிக்க தேசிய பொலிஸ் ஆணைக்குழு ஏகமனதாக தீர்மானம் எடுத்திருந்தது.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கடந்த 25ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருக்கு இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார்.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹணவை இடமாற்றம் செய்வதற்கு முன்னர் பொலிஸ் மா அதிபர், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க மற்றும் 13 சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் கலந்துகொண்ட கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, கலந்துரையாடலில் கலந்துகொண்ட பொலிஸ் மா அதிபர், பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பதின்மூன்று பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் ஆகியோரை அழைத்து வாக்குமூலம் பெறப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தென் மாகாணத்துக்கு பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹணவின் இடமாற்றம் தேசிய பொலிஸாரின் பூரண அங்கீகாரத்துக்கு உட்பட்டது என பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியின்றி தமக்கு வழங்கப்பட்ட சட்டவிரோத இடமாற்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்கு தாம் கடமைப்பட்டிருக்கவில்லை என தென் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண, பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்கவுக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தார்.

நாட்டின் அதியுயர் சட்டமான அரசியலமைப்பு, பொலிஸ் அதிகாரிகளின் பதவிகளை மாற்றுவதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கியுள்ளதுடன், இடமாற்றங்களை அங்கீகரிக்கப் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஆணைக்குழு அதிகாரம் வழங்கவில்லையென சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண, செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய

# மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு உதவி வழங்கவுள்ள சீனா!

கொழும்பு, ஏப். 29

அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய, மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை நாட்டில் ஸ்தாபிக்கவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதுவர் சென்ஹொங் தெரிவித்தார்.

சீன முதலீடாக நாளாந்தம் 4 தொன் மசகு எண்ணெய் சுத்திகரிக்கக்கூடிய அதி நவீன தொழில்நுட்பத்துடனான சுத்திகரிப்பு மத்திய நிலையம் ஒன்று நாட்டில் அமைகப்படவுள்ளதாக அவர் கூறினார்.

மல்வத்த மகாநாயக்கர்களை சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துவெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் தற்போதுள்ள மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மிக பழமையானது.

புதிய சுத்திகரிப்பு நிலையம் திறக்கப்பட்டதன் பின்னர், நாட்டின் எரிபொருள் விநியோகத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படக்கூடும்.

இந்த வருடத்தில் 120 முதல் 140 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீடு சீனாவினால் நாட்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் ஊடாக பல புதிய தொழில்வாய்ப்புக்கள் கிடைக்கப் பெறக்கூடும்-என்றார். (அ)

# மக்களை அடிமைப்படுத்தி ஆட்சியை தொடர்வதற்கு அரசு தப்புக் கணக்கு!

## டலஸ் அழகப்பெரும குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 29

மக்களைக் கஷ்டப்படுத்தி - அடிமைப்படுத்தி - "கொடுமைப்படுத்தி ஆட்சியைத் தொடரலாம் என அரசு தப்புக்கணக்குப்போட்டுள்ளது" - என்று சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகப்பெரும எம்.பி. குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒரு பக்கம் பொருட்களின் விலைகளை அதிகரித்த அரசு மறுபக்கம் வரிகளையும் உயர்த்தியது. இப்போது, தமக்கு எதிராகப் பொங்கியெழுவோரை அடக்குவதற்காகப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற கொடிய சட்டத்தையும் நிறைவேற்ற இந்த அரசு படாதபாடுபடுகின்றது.

அரசின் இந்த அராஜக நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடவேண்டும். இதில் இன, மத, கட்சி வேறுபாடு இருக்கக்கூடாது. இப்படியான வேற்பாடுகளால் தான் நாடு பின்னோக்கிப் பயணித்தது.

இன, மத, கட்சி வேறுபாடுகளை மறந்து நாம் அனைவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் ஒன்றிணைய வேண்டும்-என்றார். (அ)

# மேலும் அழிவை நோக்கியே பயணிக்கின்றது இலங்கை!

## ரில்வின் சில்வா எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 29

**“இனிக் கடன் எடுப்பதற்கு இடமும் இல்லை. விற்பதற்கும் பொருளும் இல்லை. நாடு முன்னேறுவதற்கு வாய்ப்பில்லை. மேலும் அழிவை நோக்கியே நாடு செல்கின்றது” - என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில்- நாட்டின் உண்மை நிலை தெரிந்தவர்கள் அறிவார்கள் நாடு மேலும் பின்னோக்கிச் செல்லப்போகின்றது என்று. இருப்பதைவிட பெரிய பிரச்னைகள் வரப்போகின்றன. இதுவொரு இடைவேளை.

கடனை அடைப்பதற்கு மேலும் கடன் வாங்குதல், அரச நிறுவனங்களை விற்றுக் கடனை அடைத்தல் போன்றவை நாட்டை முன்னேற்றுவதற்கு உதவாது.

இருக்கின்ற கடைசிச் சொத்தையும் விற்று கடன் வாங்கும் இடம்தான் ஐ.எம்.எப். இப்போது இந்த ஆட்சியாளர்கள் அங்கும் கடன் வாங்கிவிட்டார்கள். அதற்கு அப்பால் என்ன செய்வது?

ஒரு டொலரையாவது மேலதிகமாகச் சம்பாதிப்பதற்கான வேலைத்திட்டம் அரசிடம் இல்லை. அரச நிறுவனங்களை விற்றுப் பணம் தேடும் நிலைப்பாட்டில் மட்டும்தான் அரசு ஈடுபட்டுள்ளது. அது மட்டும்தான் அரசிடம் இருக்கும் ஒரேயொரு திட்டம்.

இனிக் கடன் எடுப்பதற்கு இடமும் இல்லை. விற்பதற்கும் பொருளும் இல்லை. நாடு முன்னேறுவதற்கு வாய்ப்பில்லை. மேலும் அழிவை நோக்கியே நாடு செல்கின்றது.

மக்களின் நுகர்வு குறைந்துள்ளது. இதனால் பொருட்களின் இறக்குமதி குறைந்துள்ளது. இதனால் கொஞ்சம் டொலர் மிஞ்சியுள்ளது.

இதை வைத்துக்கொண்டு நாடு நல்ல நிலைமையை அடைந்துள்ளது என்று சொல்ல முடியுமா? இப்படியே நாட்டைக் கொண்டு செல்ல முடியுமா?

மக்கள் விரும்பிய பொருட்களை விரும்பியவாறு வாங்க முடியாமல் பயந்து பயந்து வாங்குவது பொருளாதார முன்னேற்றமா?

சாப்பாட்டு பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதால் அதன் கொள்வனவு குறைந்துள்ளது. மக்கள் சாப்பிடுவதைக் குறைத்துள்ளனர்.

எரிபொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளதாலும் கோட்டா முறையின் கீழ் எரிபொருள் வழங்கப்படுவதாலும் மக்கள் தேவையான அளவு மாத்திரமே எரிபொருள் வாங்குகின்றனர். சுற்றுலா செல்வதில்லை. தூர இடங்களுக்குச் செல்வதில்லை. இதனால் பெற்றோல் வரிசை இல்லை.

இதெல்லாம் மேலோட்டமாகப் பார்க்கும்போது நிலைமை சரி வந்துவிட்டது போல் தெரிகின்றது. ஆனால், உண்மை அதுவல்ல. நிலைமை மேலும் மோசமடையும்-என்றார். (அ)

# எனது நூலை அமெ. தூதுவர் மொழி பெயர்த்து ஒருநாளுக்குள் வாசித்தமை மகிழ்ச்சி தருகிறது

## கூறுகின்றார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, ஏப். 29

அமெரிக்கத் தூதுவர் தனது நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஒரு நாளுக்குள் தனது படைப்பை வாசித்தது மகிழ்ச்சியளிக்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது புத்தகத்தை 'புனைவு' என்று கூறியதற்குப் பதிலளிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ இதனை குறிப்பிட்டார்.

விமல் வீரவன்ஸவின் நூலில் அமெரிக்காவுக்கு எதிரான கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அந்த குற்றச்சாட்டுக்களை ஜூலி சங் ஏற்கனவே மறுத்திருந்தார்.

இதேவேளை வீரவன்சவின் நூலில் பொன்சேகாவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா நேற்று முன் தினம் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவை கடுமையான முறையில் கண்டித்து பேசினார்.

'இராணுவத் தளபதிகள் மீது சேறு பூச வேண்டாம் என்றும் விமல் வீரவன்ஸ, அமைச்சுப் பதவியைப் பெற முயற்சிக்கிறார்' என்றும் பொன்சேகா குற்றம் சுமத்தினார்.

எனினும் இதற்கு பதிலளித்த வீரவன்ஸ, தனது பிரசுரத்தின் மூலம் சதித்திட்டத்தின் உண்மை வெளிவருவதால் சரத் பொன்சேகா வேதனைப்படுவதாக குறிப்பிட்டார்.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அமெரிக்கத் தூதுவர் மற்றும் சரத் பொன்சேகாவின் கட்டுப்பாட்டில் இருந்தார் என விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (அ)

# எந்தச் சொத்துக்களையும் அரசு ஒருபோதும் விற்காது

## கூறுகின்றார் ஆசு மாரசிங்க

கொழும்பு, ஏப். 29

“அரசின் எந்தச் சொத்துக்களையும் அரசு விற்காது. காணியின் - நிறுவனங்களின் உரிமையை வைத்துக்கொண்டு குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படும்” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்- 52 அரச நிறுவனங்கள் 2022 இல் அடைந்த நட்டம் 932 பில்லியனாகும். ரெலிகொம் நிறுவனம் 163 வயதைக் கொண்டது. இருந்தும், தொலைபேசி இணைப்பு ஒன்றைப் பெறுவதற்காக அன்று பாடுபட்டோம். இன்று அதன் பங்குகள் ஜப்பான் நிறுவனத்திடம் கொடுக்கப்பட்டதால் அந்தப் பிரச்னைகள் இல்லை. இலாபம் மீட்டும் நிறுவனமாக ரெலிகொம் மாறியுள்ளது. சேவைகளும் தரம்.

இருந்தும், அந்த நிறுவனத்திடம் இருக்கின்ற வளங்களுக்கு ஏற்ப இன்னும் இலாபம் மீட்ட முடியும். அதற்கு ஏற்ப அதை இன்னும் மறுசீரமைக்க வேண்டும்.

குறைந்த ஊழியர்களைக் கொண்ட டயலொக் நிறுவனம் அதிக இலாபம் பெறுகின்றது. கூடிய ஊழியர்களைக் கொண்ட ரெலிகொம் அதைவிடக் குறைந்த இலாபத்தையே பெறுகின்றது.

அதிக இலாபம் மீட்டும் நிறுவனமாக ரெலிகொம்மை மாற்ற வேண்டும் என்றால் தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து மறுசீரமைப்புச் செய்ய வேண்டும்-என்றார். (அ)

# ஜனாதிபதித் தேர்தல் பற்றி சிலர் அவசரப்பட்டு கருத்து

## அமைச்சர் பந்துல விசனம்

கொழும்பு, ஏப். 29

“அறிவிக்கப்படாத ஜனாதிபதித் தேர்தல் குறித்து சிலர் அவசரப்பட்டு கருத்து வெளியிட்டு வருகின்றனர்” - என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அரசு இன்னும் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

மொட்டுக் கட்சியின் வேட்பாளர் தொடர்பில் சிலர் தமது சொந்தக் கருத்துக்களையே வெளியிடுகின்றனர்.

அந்தக் கருத்துக்கள் கட்சியின் நிலைப்பாடு அல்ல. அவர்கள் தமது சொந்தக் கருத்துக்களை - தமது தனிப்பட்ட நிலைப்பாடுகளையே வெளியிட்டு வருகின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர் மொட்டுக் கட்சி ஒன்றுகூடி வேட்பாளர் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கும்.

வெற்றிபெறக்கூடிய சிறந்த வேட்பாளரே களமிறங்குவார். அவர் யார் என்று இப்போது தெரியாது-என்றார். (அ)

# நானுஓயாவில் உணவு ஒவ்வாமையால் 26 மாணவர்கள் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஏப். 29

நானுஓயா காவல்துறை பிரிவுக்குட்பட்ட நானுஓயா கிளாசோ பிரதேச பாடசாலையில் வழங்கப்பட்ட உணவு ஒவ்வாமை காரணமாக 26 மாணவர்கள் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் தொடர்ந்து பகலுணவு வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று வழங்கப்பட்ட உணவை அருந்தியவேளை மாணவர்களுக்கு மயக்க நிலை, வயிற்று வலி, குமட்டல் மற்றும் வாந்தி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டன.

உணவருந்தியவர்களில் சுமார் 26 இற்கும் அதிகமான மாணவர்கள் வயிற்று உபா தைக்கு உள்ளாகியதனைத் தொடர்ந்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# காலாவதியான கண்ணீர்ப்புகைக்குண்டுகளை அப்புறப்படுத்துமாறு கோபா குழு கோரிக்கை

கொழும்பு, ஏப். 29

நாடளாவிய ரீதியில் உள்ள காவல்துறை நிலையங்களில், காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை சேகரித்து அப்புறப்படுத்துமாறு கோபா எனப்படும் நாடாளுமன்ற பொது கணக்குகளுக்கான குழு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்தநிலையில், காலாவதியான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை அகற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவை ஒருபோதும் பயன்படுத்தப்பட மாட்டாது எனவும் பொலிஸ் உயர் அதிகாரிகள், கோபா குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

மேலும், சர்வதேச மரபுகளுக்கு அமைவாக, பொதுக் கலவரங்கள் மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தயாரித்து சமர்ப்பிக்கவேண்டும் என்று கோபா குழுவின் தலைவர் லசந்த அழகியவண்ண பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் பொலிஸ் திணைக்களத்தின் அடுத்த உத்தேச வேலைத் திட்டத்தை ஒரு மாத காலத்துக்குள் வழங்குமாறும் அவர் பொலிஸ் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளார்.

2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயற்பாடுகளை ஆராய்வதற்காக, பொதுக் கணக்குகளுக்கான குழுவின் முன்னிலையில், இலங்கை பொலிஸ் அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் உட்பட பொலிஸ் உயர் அதிகாரிகள் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

பொலிஸ்துறையில் உள்ள பாரம்பரிய சூழல் மாற்றப்பட்டு எதிர்காலத்தில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட உயர் பதவிகளுக்கு பெண்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் தேவையான சீர்திருத்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இதன் மூலம் வருங்காலத்தில் பெண் பொலிஸ் அதிபர் நியமிக்கப்படுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் அவர் கோபா குழுவிடம் தெரிவித்துள்ளார். (அ)

# எங்களை குப்பைகளாக பார்க்கிறார்கள்...!

## ஆனால், நாங்கள் குப்பைகளை அகற்றாவிடின் நகரம் நாறிவிடும்!

**ஆர். புகழவன்**



கொழும்பு - கொட்டாஞ்சேனையில் கழிவு நீர் சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இருவர் உயிரிழந்தனரென வெளியான செய்தியை பார்க்க நேர்ந்தது. வவுனியாவிலும் 2019ஆம் ஆண்டு சுத்திகரிப்புப் பணியாளர்கள் மூவர் பணியின்போது உயிரிழந்தனர். இலங்கையில் சுத்திகரிப்புப் பணியாளர்களின் பாதுகாப்புத் தொடர்பில் போதிய அறிவூட்டல்கள் கரிசனை இல்லாத நிலைமை காணப்படுகிறது.

சுத்திகரிப்புப் பணியென்பது நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்களை அடிப்படையாக வைத்தே இடம்பெறுகிறது. இதனால், உள்ளூராட்சி மன்றங்கள் மக்களுக்கான சேவை வழங்கும் நிறுவனங்கள் என்ற அடிப்படையில், சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பாதுகாப்பை சரிவரக் கையாள்கின்றனரா என்பது ஆராயப்பட வேண்டியது அவசியம். சட்டங்கள் மற்றும் சபை தீர்மானங்களின் பிரகாரம் சுகாதாரத் தொழிலாளர்கள்மீது கரிசனை கொள்ளப்படுவதாக கூறப்பட்டாலும், அவை செயல்பாட்டு ரீதியில் மிக மந்தகதியிலேயே காணப்படுகின்றது.

கல்வியறிவு, சமூக அந்தஸ்து ஆகிய நிலைகளில் மிகவும் பிற்படுத்தப்பட்டுள்ள மக்கள் குழுவே சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்றனர். பிற மனிதர்களுக்காகத் தமது கரங்களை அழுக்காக்குவதற்குப் பின்னால் பொதிந்துள்ள அவர்களின் வலி நிறைந்த கதைகளோ ஏராளம்....!

கடந்த மார்ச் 27ஆம் திகதி கொழும்பு கொட்டாஞ்சேனையில் கழிவு நீர் வெளியேற்றும் குழி ஒன்றை சுத்திகரிப்பு செய்தபோது இரண்டு தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இந்த விடயம் குறித்து கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயராகப் பதவி வகித்த, அல்ஹாஜ் எம். சீ. எம். இக்பாலுடன் பேசியபோது,

“கொழும்பு கொட்டாஞ்சேனையில் உயிரிழந்த இருவரில் ஒருவர் எமது மாநகர சபையின் நிரந்தர தொழிலாளி மற்றையவர் நிரந்தரமாக்கப்படாதவர்’ என்றவாறு அன்றைய விபத்துச் சம்பவங்களின் பின்னணிகளை விளக்கினார்.

சுத்திகரிப்புப் பணி என்பது ஏலவே கூறியதைப் போன்று, நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டாலும், சுத்திகரிப்புப் பணியை செய்பவர்களின் உரிமைகளும் குரல்களும் வெளிப்படுத்தப்படாது, அவர்களின் விருப்பு வெறுப்புகளும், கள அனுபவங்களும் கருத்தில்கொள்ளப்படாது - சட்டங்களின் மூலம் அவர்கள் ஆளப்படுகின்றனர். இதனால்தான் அசம்பாவிதங்கள் நேர்கின்றன என்பதை களரீதியான பயணங்களின்போது உறுதிப்படுத்தக் கூடியவையாக இருந்தன.

சாதி மற்றும் பொருளாதார நலிவுகளை காரணங்காட்டி குரலற்றவர்களாக அந்த தொழில்துறையினரை வஞ்சிக்கின்றனர். இதனால் தற்போது சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுபவர்கள் மாத்திரமல்ல, அவர்களின் சந்ததியினரும் பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். இதற்கு நீதியான - மனிதாபிமான தீர்வொன்று மிக மிக அவசியம். அப்படியான தீர்வொன்றை எட்ட முடியாவிடின், அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலமும் சூனியமாக்கப்படும் ஆபத்துகள் உள்ளன. இதற்கு ஒட்டுமொத்த சமூகமும் பொறுப்புக்கூற தயாராக வேண்டும்.

“தீண்டத்தகாதவர்களைப் போலவே பார்ப்பார்கள் - நாங்கள் என்ன பொய் சொல்லி, களவு செய்தா உழைக்கின்றோம்.”
– யாழ். மாநகர துப்புரவு தொழிலாளி

“எனது மகள் இன்றைக்குப் பள்ளிக்கூடம் போவதென்றால் தனக்கு (அப்பியாச) கொப்பிகள் தேவை என்று, காலை 5.30 மணிக்கு பஸ் எடுப்பதற்காக நான் தயாரா கும்போதே கேட்க ஆரம்பித்து விட்டாள். வாங்கிக்கொ டுக்க முடியாத கையறு நிலை. கொப்பிகளை எனது மனைவி வாங்கிக் கொடுத்தாரோ தெரியாது, வாங்கிக் கொடுத்திருக்காவிட்டால் பாடசாலைக்கு போகாமல் தான் மகள் விட்டிருப்பாள்”, என்றவாறே வீதியில் இருந்த குப்பைகளை அகற்றி, குப்பை வண்டியில் போட்டுக் கொண்டிருந்தார் மருதலிங்கம் (பெயர் மாற்றப்பட்டுள்ளது).

மருதலிங்கம் - அம்பாறை கல்முனை மாநகர சபையில் 15 வருடங்களாக சுத்திகரிப்பு தொழிலாளியாக பணியாற்றுகின்றார். மகள் அப்பியாசக் கொப்பியை கேட்டவுடன் வாங்கிக்கொடுக்க முடியாத மருதலிங்கம், சுத்திகரிப்புப் பணிக்கு வருவதற்காக தினமும் களுவாஞ்சிக்குடியிலிருந்து கல்முனை வருவதற்கு பேருந்து கட்டணமாக இரு நூறு ரூபாயும், உணவுக்காக 250 ரூபாயுமாக 450 ரூபாயை செலவு செய்கிறார்.



தி. சரவணபவன்

நண்பர்களை இழக்கின்றேன்- ‘நான் சுத்திகரிப்புத் தொழிலாளியின் மகள்’

“அம்மா குப்பை அள்ளுறவா எண்டதால எங்களோட கதைக்கக்கூட பிள்ளையள் வரமாட்டார்கள் என கூறும் மயூரிகா. யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல பாடசாலையில் தரம் 10இல் கல்வி கற்கின்றார். மயூரிகா, அடுத்த வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ளாள். ஆனால், இவளது மனதில் சஞ்சலமாகும் விடயங்களை தீர்ப்பதற்கு யாருமே முன்வருவதில்லை என்ற ஏக்கம் அவளுடன் பேசும்போது தெளிவாகத் தெரிந்தது.

மகேஸ்வரி திருநகரை சேர்ந்தவர், யாழ்ப்பாணம் மாநகர சபையில் கழிவகற்றல் தொழிலில் 11 வருடங்களாக பணிபுரிகின்றார். இவருக்கு 3 பிள்ளைகள். முதலாவது மயூரிகா. ஏனையவர்கள் 6 மற்றும் 5ஆம் தரங்களில் கல்வி கற்கின்றனர். சமூகத்தை புரிந்துகொள்ளக்கூடிய ஆற்றல் அவர்களுக்கு இல்லை.

‘பேரன்ட்ஸ் மீற்றிங் ரைம் அம்மாதான் வரோனும். நாங்கள் கேர்ள்ஸ் எண்டதால அப்பா வாறத பெரும்பாலும் ரீச்சர்மார் விரும்புறதில்லை. அம்மா வேலை முடியத்தான் வருவா. அம்மா குப்பை வண்டிலோடை போறத பார்த்த என்னோட படிக்கிற பிள்ளையள், அம்மா கிளாஸூக்கு வந்து ரீச்சரோட கதைச்சாப் பிறகு என்னோட கதைக்கிறத குறைச்சிட்டினம். ஆனாலும் ரீச்சர்மார் தாற வேலைகளை நான் சரிவர செய்வன். நாங்கள் படிச்சு அரசாங்க வேலைக்கு வந்திட்டம் என்றால் அம்மாவையும் வேலையால நிற்பாட்டலாம்’ என சமூகத்தை கற்றறிந்த சுத்திகரிப்புத் தொழிலாழியொருவரின் மகள் கூறி நின்றாள்.

விளிம்புநிலை மக்கள் குழுமத்தை சமகால பொருளாதார நெருக்கடி தாக்கிநிற்கும் சமதளத்தில் அவர்களை இந்த சமூகம் ஒதுக்கும் நிலையும் காணப்படுகிறது. வயது வித்தியாசம் ஏதுமின்றி வர்க்க ரீதியான வேறுபாடுகள் அடிமட்ட சமூகங்களில் ஆழ வேரூன்றியுள்ளன.

வெள்ளவத்தையில் இருந்து சைக்கிள் மூலம் கொழும்பு மாநகர சபைக்குச் சென்று, தனக்கு தரப்பட்ட சுத்திகரிப்பு பணிகளை முன்னெடுக்கின்றார் காமினி. இவருக்கு இரண்டு மகள்கள். ஒருவர் திருமணம் முடித்து விட்டார். ஆனால் மகளின் கணவன் உடல்ரீதியாக வலுவிழந்த ஒருவராக இருக்கின்றார். இரண்டாவது மகள் பாடசாலை ஒன்றில் உயர்தரம் கற்கின்றார். தனது மூத்த மகள் திருமணம் செய்த பின்னரே தான் மிகவும் கஷ்டமான நிலைக்குத் தள்ளப்பட்டதாகத் தெரிவிக்கிறார் காமினி.

“

**அம்மாவை குப்பை வண்டிலோட பார்த்த பிறகு பிள்ளையள் எங்களோட சேருகினம் இல்லை. நாங்கள் படிச்சு அரசாங்க உத்தியோகம் வந்தா பிறகு அம்மாவை வேலையால நிற்பாட்டுவம்.**
**- சுத்திரிப்பு தொழிலாளியின் மகள்**

“நாங்கள் நிரந்தர ஊழியர் என்றால் அரச உத்தியோகம் என வரையறுக்கின்றனர். ஆனால், எங்களுடைய கஷ்டங்கள் பரந்துபட்டது’ என்கிறார் அம்பாறை வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த சுத்திகரிப்புத் தொழிலாளியான கோபால்.

“ஒழுங்கான வீடு இல்லை. வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பித்தால் அரசாங்க உத்தியோகம் என காரணம் கூறுகின்றனர். எங்களுடைய வீட்டில் மலசலகூடம் இல்லை. அம்மா வீட்டிலுள்ள மலசல கூடத்தையே பயன்படுத்துகின்றோம். மலசலகூடத் திட்டங்கள் எங்களுக்கு அருகில் இருப்பவர்களுக்கு வருகிறது. ஆனால், எமக்கு கிடைப்பதில்லை. நாங்கள் மக்கள் சுத்தமாக இருக்க வேண்டும் என அர்ப்பணிப்போடு பணியாற்றுகின்றோம். எங்களுக்கான அடிப்படை உரிமைகள் தொடர்பில் யாரும் சிந்திப்பதில்லை. அரச ஊழியர் என்று வரையறுப்பதால், வறுமை நிலைமைகளைக் கருத்தில்கொள்ள மறுக்கின்றனர்”, என்கிறார் அவர்.

இலங்கையில் அரசாங்கம் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வீட்டுத் திட்டங்கள் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுவதில்லை. சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டு, அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவதால், அவர்களும் அரச ஊழியர்களாகவே கருதப்படுகின்றனர். உண்மையில், சுத்திகரிப்புப் பணிகளுக்குச் செல்வோர் மிகவும் நலிந்த குடும்பப் பின்னணி உடையவர்களாகவே இருப்பர். அவர்கள் அரச ஊழியர் என்ற வரையறைக்குள், சலுகைகள் புறக்கணிக்கப்பட்டவர்களாக மாறுவது, மேலும் மேலும் நலிவடைந்த மக்கள் குழுமமாகவே அவர்களை மாற்றுகின்றது.

1996ஆம் ஆண்டு சுத்திகரிப்புப் பணியாளராக யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சென்று, 1997ஆம் ஆண்டு நிரந்தர தொழிலாளியாக்கப்பட்டு, யுத்தம், சுனாமி, கொரோனா, பொருளாதார இடர் என பலவற்றுக்கும் முகங்கொடுத்த ஒரு பெண் சுத்திகரிப்புத் தொழிலாளியாக உள்ளார் ஆச்சிமுத்து.

“மக்கள் எங்களைத் தீண்டத்தாகாதவர்களாகவே பார்க்கின்றனர். ஆனால், நாங்கள் பொய் சொல்லாது, களவு எடுக்காது எங்களுடைய பணிகளை மாத்திரம் செய்கின்றோம். எங்களுடைய சுப்பவைசர் (கண்காணிப்பாளர்கள்) கூட எம்மை தூற்றுவார்கள். தங்கள் மனங்களில் ஏற்படும் கஷ்டங்களை எல்லாம் எங்கள் மீதுதான் கொட்டுவார்கள் (சுமத்துவார்கள்). மனதைக் காயப்படுத்தினால் சிலவேளை திருப்பிப் பேசிவிடுவேன். பெரும்பாலான நேரங்களில் அப்படி பேசத்தோன்றினாலும இது வழமை என கடந்து விடுவேன்.

“6 மணிக்கு வேலைக்குப் போக வேண்டும். 1 மணிக்கு வேலை முடியும். முன்னர் 12 மணிக்கு வேலை முடிந்தால்

(09ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# உலக சனத்தொகையில் முதலிடம் பெற்ற இந்தியா!

## 200 வருடங்கள் முதலிடத்திலிருந்த சீனாவை பின்தள்ளியது!!




மக்கள்தொகையில் சீனாவை பின்னுக்குத் தள்ளி இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது. ஐ.நா. மக்கள் தொகை நிதியத்தின் (யுஎன்எஃப்பிஏ) உலக மக்கள் தொகை அறிக்கை -2023 அண்மையில் வெளியானது. அதில் இந் தியா 142.86 கோடி மக்கள்தொகையுடன் முதலிடத்தி லும், சீனா 142.57 கோடி மக்கள்தொகையுடன் இரண் டாம் இடத்திலும் உள்ளது தெரியவந்துள்ளது.

கடந்த 200 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள்தொகையில் சீனா முதலிடத்தில் இருந்துவந்தது. இந்திய மக்கள் தொகையில் 14 வயது வரை 25 சதவீதம் பேரும், 15 முதல் 64 வயது வரை 68 சதவீதம் பேரும், 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் 7 சதவீதம் பேரும் இருப்பதும் தெரியவந்துள்ளது.

மக்கள்தொகை பெருக்கம் நாட்டுக்கு நன்மை பயக்குமா அல்லது கெடுதலாகுமா என்ற பெரும் விவாதத்தை இந்தப் புள்ளிவிவரம் கிளப்பி உள்ளது.

நமது நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான உத்தர பிரதேசத்தின் மக்கள்தொகையையே கொண்ட பாகிஸ்தானும் (சுமார் 23.14 கோடி), தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் தோராயமாக மூன்றில் ஒரு பங்கையே கொண்ட இலங்கையும் (2.2 கோடி) பொருளாதார ரீதியாக மிகப் பெரும் பிரச்னையை எதிர்கொண்டுள்ளன. கொரோனா பெருந்தொற்றின் பாதிப்பு, உக்ரைன் -ரஷ்யா இடையேயான போர் போன்றவற்றின் காரணமாக, தமிழ்நாட்டின் அளவுக்கு கூட மக்கள்தொகை இல்லாத பல நாடுகள் பொருளாதார ரீதியாக கடும் சவாலை எதிர்கொண்டு திண்டாடிக் கொண்டிருக்கின்றன.

இந்த சூழலில், கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடித்து உலக நாடுகளுக்கு கொடுத்ததுடன் 80 கோடிக்கும் அதிகமானோருக்கு 25 மாதங்களுக்கும் மேலாக 5 கிலோ உணவு தானியத்தை மத்திய அரசு இலவசமாகக் கொடுத்துள்ளது.

பருவம் தவறிய மழை, கடும் வெப்பம் போன்ற பல்வேறு பாதகமான சூழ்நிலைகளுக்கு இடையிலும், இந்தியாவில் 2020 - 21ஆம் பயிர் ஆண்டில் (ஜூலை -ஜூன்) சாதனை அளவாக 109.59 மில்லியன் டன் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.





2021-22இல் வெப்ப அலை போன்றவற்றால் 106.84 மில்லியன் டன்னாக குறைந்தாலும் இந்த ஆண்டு 112 மில்லியன் டன்னுக்கு அதிகமாக கோதுமை உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பால் உற்பத்தியிலும் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு 183.96 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது அமெரிக்காவைவிட 50 சதவீதமும், சீனாவைவிட 3 மடங்கும் அதிகமாகும். ரூ.2,928 கோடி மதிப்பிலான 1.08 லட்சம் டன் பால் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

இதுபோன்று பல துறைகளிலும் இந்தியா சாதனை படைத்து வரும் நிலையில், இந்த மக்கள்தொகை பெருக்கத்தை 142 கோடி வயிறுகளாகப் பார்க்காமல் 284 கோடி கைகளாகப் பார்த்தால் பாதகம் என்று கருதப்படும் அம்சம்கூட சாதகமானதாக மாற்றப்படலாம்.

இந்தப் பாதையில் இந்திய மத்திய அரசு ஏற்கெனவே பல முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சாலைகள் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான மூலதனச் செலவுகளுக்காக முன்னெப்போதும் இல்லாத வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 20 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.



அண்மையில் மேம்படுத்தப்பட்ட சென்னை சர்வதேச விமான நிலையம் போன்று நாடு முழுவதும் விமான நிலையங்களும், துறைமுகங்களும் நவீனமயமாக்கப்படுகின்றன. சர்வதேசத் தரத்தில் நெடுந்தொலைவு சாலைகள் அமைக்கப்படுகின்றன. இணையம் மூலம் பெரும்பாலான சேவைகள் இணைக்கப்பட்டுள்ளன. கிராம மக்கள் கூட இணையப் பரிவர்த்தனை மேற்கொள்வது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மத்திய அரசு ஊக்கம் அளித்ததன் காரணமாக 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தாக்க நிறுவனங்கள் உருவாகி உள்ளன. இவையெல்லாம் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன.

இதுபோன்ற பல பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் செல்ல வேண்டிய தொலைவு அதிகம் உள்ளது. எந்த ஒரு வளர்ச்சிப் பணிக்கும் புள்ளிவிவரங்களே அடிப்படையாகும். 2021 இல் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி கொரோனா காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அதற்குள் இந்தப் பணி நடைபெறுமா என்பதில் தெளிவில்லை. மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி நடைபெற்றால்தான் திட்டமிடுதல் சாத்தியம் என்பதால் இது அதிவிரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

வளர்ந்த தேசமாக இந்தியா மாற வேண்டுமெனில், சமூக -பொருளாதார, சுகாதார, அரசியல் சூழ்நிலைகள் அதற்கு சாதகமானதாக இருக்க வேண்டும். நாடு முழுவதும், கடுமையாக உழைக்கக்கூடிய பருவமான 15 முதல் 24 வயது வரை 25.4 கோடி பேர் உள்ளனர். இவர்கள் திறன் மேம்படுத்தப்பட்டால் உலகின் தொழில்கூடமாக இந்தியா மாற முடியும். தரமான கல்வி, இளைஞர்களின் திறன் மேம்பாடு, எளியோருக்கும் எட்டும் வகையில் சுகாதார கட்டமைப்புகள், வேலைவாய்ப்பு, உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றில் திட்டமிட்டு செயல்பட வேண்டிய தருணம் இது. இதில் ஏதேனும் ஒரு விஷயத்தில் கோட்டை விட்டாலும் இந்த மக்கள்தொகை பெருக்கம் என்பது பெரும் தலைவலியாக மாறிவிடக் கூடும்.

எண்ணிக்கை முக்கியம் என்றாலும் திறன் வளம்தான் தாக்கம் ஏற்படுத்தக் கூடியதாகும். சீனாவின் 140 பேரில் 9 கோடி பேர் திறன்மிக்கவர்களாக உள்ளனர். அவர்கள் சராசரியாக 10.5 ஆண்டு கல்வி பெற்றுள்ளனர் என்று மக்கள்தொகையில் முதலிடம் குறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின் கூறியுள்ளது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். (தினமணி)

# எங்களை குப்பைகளாக பார்க்கிறார்கள்...!

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏதும் கூலி வேலைகளுக்கு போக வாய்ப்புக் கிடைக்கும் இப்போது அப்படிக் கிடைப்பதில்லை என்று கூறிய அவர், தொழிலாளர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்ட தொழில் சங்கங்கள் சந்தாப் பணத்தை குறித்த நேரத்துக்கு வாங்கும் வேகத்துக்கு தொழிலாளர்களுக்கான நலன்கள் தொடர்பில் சிந்திப்பதில்லை என்ற மனக்குறையையும் பகிர்ந்துகொண்டார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தொழிற்சங்க பிரதிநிதிகளைத் தொடர்புகொண்டபோது, “இங்கே வெற்றிடங்கள் நிறைய இருக்கின்றன. அவை நிரப்பப்படவேண்டும். ஆணையாளர்கள் நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். உரிய ஆளணியின்றித்தான் கழிவகற்றல் இடம்பெறுகின்றது. மேயரால் ஆளணி நியமனங்களை செய்யவே முடியாது என தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை எளிதாக ஆணையாளர் மீது சாடினார்.

தங்களுடைய ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பு மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் தேவைகளை முடிந்தவரை பூர்த்தி செய்ததாகக் கூறிய மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் தி. சரவணபவன், தொழிலாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் முதற்கொண்டு சுத்திகரிப்பு இயந்திர வளங்களையும் அதிகரித்தாகக் கூறினார்.

அத்துடன், சுத்திகரிப்பு தொழிலாளிகளின் பிள்ளைகள் உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தி கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டால் மாதாந்தம் 5 ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்குவிப்புத் தொகையையும், கிழக்கு மாகாணத்துக்கு அப்பாலுள்ள பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவோருக்கு 8 ஆயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் ஊக்குவிப்புத் தொகையை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

சுத்திகரிப்புத் தொழிலாளிகளின் ஆளணி மட்டக்களப்பில் அதிகரிக்கப்பட வேண்டும் என கூறிய முன்னாள் முதல்வர். கோட்டாபய ராஜபக்ச ஒரு இலட்சம் வேலை வாய்ப்பு என்ற ரீதியில் முறையற்ற நியமனங்களை வழங்க முயன்றபோது எதிர்ப்புக்களை வெளியிட்டதாகவும், அதற்கு காரணம் ஏற்கனவே 105 தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படாது இருக்கும் நிலையில், அவர்கள் அல்லாத வேறொரு தரப்பைக்கொண்டு ஆளணியை நிரப்புதல் பொருத்தமற்ற செயல்பாடு என்றும் விளக்கினார்.

கொழும்பு மாநகர சபையும் தமக்கு கீழ் பணிபுரியும் சுத்திகரிப்பு தொழிலாளிகளுக்கு இந்த பொருளாதார இடர்பாடுகளின் போது கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது என மாநகர முன்னாள் பிரதி மேயர் குறிப்பிட்டிருந்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் தலையாய சபைகள் என வர்ணிக்கப்படும் மாநகர சபைகளில் சுத்திகரிப்புத் தொழிலாளிகள் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என்பதற்கு அரசாங்கங்களும் உள்ளூராட்சி அமைச்சும் உரிய தீர்வைக் காணவேண்டும். அவர்கள் காணும் தீர்வே ஏனைய நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கு ஓர் முன்னுதாரணத்தை எளிதில் கொண்டு செல்லும்.

மட்டக்களப்பு மாநகர சபையில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் உயர் கல்வி தொடர்பில் காட்டப்படும் அக்கறையும், கொழும்பு மாநகர சபையில் சுத்திகரிப்புத் தொழிலாளிகளுக்கு பொருளாதார இக்கட்டில் கடன் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமையும் விசேட கவனத்துக்கு உட்பட்டவை.

இதைப்போன்றே சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் அனைவருக்கும் மருத்துவக் காப்பீடும், ஆயுள் காப்பீடும் உள்ளூராட்சி மன்றங்கள் செய்து கொடுக்க வேண்டும். இவற்றால்தான் ஒவ்வொரு சுத்திகரிப்பு தொழிலாளியையும் பாதுகாக்க முடியும். அவரை நம்பியுள்ள குடும்பத்தையும் காக்க முடியும். இதற்காக துறை சார்ந்த அமைச்சர்கள் கொள்கைசார் தீர்மானங்களை எடுக்க வேண்டும். அவை அரசியல் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படாது நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கக் கூடியனவாக அமைதல் வேண்டும்.

# இலாபம் அடையும் அரச நிறுவனங்களை அவசரப்பட்டு விற்பனை செய்யமுடியாது

## சஜித் அணி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 29

அரச நிறுவனங்களைத் தனியார் நிறுவனங்களுக்கு விற்பது தப்பில்லை. அதற்காக இலாபம் அடைகின்ற எல்லாவற்றையும் அவசரப்பட்டு விற்க முடியாது" - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

இலாபம் பெறும் அரச நிறுவனங்களை விற்பதை எம்மால் ஏற்க முடியாது. தேவையில்லாத சர்வதேச கடன்களைப் பெற்று எம்மால் தாங்கிக் கொள்ள முடியாத வேலைத் திட்டங்களை செய்தனர். அதன் பிரதிபலன்களை நாம் இன்று அனுபவிக்கின்றோம்.

இதனால் உண்டான கடன்களை அடைப்பதற்காக நாட்டின் வளங்களை - இலாபமீட்டும் நிறுவனங்களை விற்பதை ஏற்க முடியாது.

அதேவேளை, தனியார் இல்லாமல் எல்லாப் பிரச்னைகளையும் அரசால் செய்ய முடியாது. முன்பு தொலைபேசி பழுதானால் அதைத் திருத்துவதற்காக ரெலிகாம் ஊழியர்களின் பின்னால் அலைய வேண்டும். இப்போது அது தனியாருக்குக் கொடுத்துள்ளதால் அந்தப் பிரச்னை இல்லை.

ஸ்ரீலங்கா எயார் லைன்ஸ் நிறுவனம் எமிரேட்ஸ் நிறுவனத்துடன் இணைந்து செயற்படும்போது இலாபம் கிடைத்தது. பின்னர் சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தை மகிந்த அரச உடைமையாக்கியதும் கோடிக்கணக்கில் நட்டம் ஏற்பட்டு வருகின்றது.

உலகத்தோடு சேர்ந்து போக வேண்டும். இப்படியே இருந்தால் முன்னேற முடியாது. அதற்காக இலாபம் அடைகின்ற எல்லாவற்றையும் அவசரப்பட்டு விற்க முடியாது. அப்படிச் செய்து எப்படி அரசின் இலாபத்தை அதிகரிப்பது?

அஜித் நிவார்ட் கப்ரால் தங்கத்தை விற்றது போல் விற்க முடியாது.நன்றாக ஆய்வு செய்த பின்தான் விற்க வேண்டும். அரசு வர்த்தக செயற்பாடுகளில் இருந்து விலக வேண்டும்.

அன்று அரசின் கையில் இருந்தபோது டெலிகொம் இலாபமடையவில்லை. தனியாருக்குக் கொடுத்ததன் பின்தான் இலாபமீட்டியது. இப்போது இருக்கின்ற முறைமைக்கு ஏற்பவே நாம் பயணிக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களை எப்படி வாழவைப்பது என்று யோசிக்க வேண்டும். அதனால்தான் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்ல வேண்டும் என்று நாம் ஆரம்பத்தில் இருந்தே கூறி வந்தோம். நாடு வங்குரோத்து அடையும் முன்பே போகச் சொன்னோம். ஆனால், நாம் வங்குரோத்து அடைந்த பின்பே சென்றோம்.

நாடு வீழ்ந்து கிடக்கும் நேரத்தில் பஸ்களுக்குத் தீ வைக்க முடியாது. ட்ரான்ஸ்போமருக்குத் தீ வைக்க முடியாது. அப்படிச் செய்தால் நாடு இன்னும் சிக்கலில்தான் விழும் - என்றார்.

(அ)

# மின்சார சபையின் மறுசீரமைப்புக்கு உதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம்!

கொழும்பு, ஏப். 29

மின்சார சபையின் மறுசீரமைப்புத் திட்டத்திற்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியுள்ளது.

மின்சாரத்துறை நிபுணர்கள் உட்பட பொறுப்பான அமைச்சர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவருடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதற்கமைய, அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு கடன் உதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

மின்சார துறையின் மறுசீரமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்கள், மின் கட்டணங்கள், மின் துறையில் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை குறித்தும் இந்த கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது.

(அ)

# வேட்பு மனு தாக்கல் செய்த அரச ஊழியர் தேர்தல் சட்டத்தை பின்பற்ற வேண்டும்!

## பிரதமர் அறிவிப்பு



கொழும்பு, ஏப். 29

உள்ளூராட்சி தேர்தல் வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதே தவிர, இரத்துச் செய்யப்படவில்லை. ஆகவே, தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்த அரச ஊழியர்கள் தேர்தல் சட்டத்தை பின்பற்ற வேண்டும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் அல்லது கொடுப்பனவு வழங்க கொள்கை மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கலந்துரையாடியுள்ளேன். தேர்தல் சட்டங்களுக்கு அமையவே நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

குறிப்பாக தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை ஒத்திவைத்துள்ளதே தவிர இரத்துச் செய்யவில்லை. உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு அடுத்த வாரத்தில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இதனால் தேர்தல் சட்டத்திற்கமைய செயற்பட வேண்டும். குறித்த அரச ஊழியர்கள் தமது தேர்தல் தொகுதியில் அல்லாது அதனை அண்மித்த வேறு பகுதியில் பணிக்கு செல்ல முடியும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கும் அறிவுறுத்தலுக்கு அமைய அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அரச சேவையாளர்களை மீண்டும் சேவைக்கு இணைத்துக் கொள்வது தொடர்பில் சட்ட ஆலோசனை கோரப்பட்டுள்ளது. உரிய வழிமுறைக்கு அமைய அமைச்சரவை பத்திரம் வெகுவிரைவில் சமர்ப்பிக்கப்படும் - என்றார்.







# மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயம் 30 வருடங்களுக்கு பின் மீண்டும் திறப்பு

மட்டக்களப்பு, ஏப்.29

30 வருடங்களாக பூட்டப்பட்டிருந்த மட்டக்களப்பு சிங்கள மகாவித்தியாலயம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை கிழக்கு மாகாண ஆளுநரின் பங்குபற்றுதலுடன் காலை 9.30 மணியளவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள மண்முனை வடக்கு கோட்டத்திலுள்ள மும்மொழிப் பாடசாலையான சிங்கள மகாவித்தியாலயம் கடந்த 30 வருடங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தம் காரணமாக பூட்டப்பட்டிருந்த நிலையில் தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநர் அநுராத ஜகம்பத் மற்றும் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யு.ஜீ.திசாநாயக்க மற்றும் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி.அகிலா கனகசூரியம் ஆகியோர்கள் கூட்டாக எடுத்த முயற்சியின் பயனாக மீண்டும் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ.திசாநாயக்க அழைப்பின் பிரகாரம் மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி.சுஜாத்தா குலேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா ஜகம்பத் பிரதம அதிதியாக கலந்துகொண்டு மீள் புனரமைப்பு செய்யப்பட்ட பாடசாலைக்கான நினைவுப்படிவத்தை திரைநீக்கம் செய்து நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பீ. எஸ்.ரத்நாயக்க கௌரவ அதிதியாகவும்,கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.பீ.மடநாயக்க,கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி.அகிலா கனகசூரியம்,மக்கள் வங்கியின் மட்டக்களப்பு பிராந்திய முகாமையாளர் ஈ.பீ.ஏ.சிசிரகுமார ஆகியோர்கள் விஷேட அதிதிகளாகவும், மற்றும் மதத்தலைவர்கள், கிழக்கு மாகாண உயரதிகாரிகள், வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக்கல்வி பணிப்பாளர்கள், கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், உதவிக்கல்வி பணிப்பாளர்கள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர். (அ)




# மாணவர்கள் கௌரவிப்பு




மட்டக்களப்பு, ஏப்.29

இலங்கை வங்கி நாடளாவிய ரீதியில் தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தமது வாடிக்கையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வை வருடாவருடம் நடத்தி வருகின்றது.

அந்த வகையில் 2021ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வாடிக்கையாளர்களான ஏழு மாணவர்களையும் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இலங்கை வங்கி வாழைச்சேனை கிளையில் இடம்பெற்றது.

வங்கி முகாமையாளர் ராஜகோபால் பிரேமசந்திரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை வங்கியின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய முகாமையாளர் பால சுப்ரமணியம் பிரதீபன் கலந்து கொண்டதுடன் கற்பித்த ஆசிரியர்களும் மாணவர்களின் பெற்றோர்களும், வங்கி ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை வங்கி நாடளாவிய ரீதியில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற இரண்டாயிரம் மாணவர்களுக்கு பதினையாயிரம் ரூபா பணமும் பதக்கமும் சான்றிதழும் அன்பளிப்பும் வழங்குவதோடு சேமிப்பு கணக்கு வைத்து பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் சான்றிதழும் அன்பளிபபும் வழங்கப்படும்.

அதன் அடிப்படையில் வாழைச்சேனை இலங்கை வங்கி கிளையில் நான்கு மாணவர்களுக்கு பதினையாயிரம் ரூபா பணமும் வைப்பில் வைக்கப்பட்டதோடு பதக்கம் அணிவித்ததோடு சான்றிதழும் அன்பளிப்பும் வழங்கப்பட்டதோடு மூன்று மாணவர்களுக்கு சான்றிதழும் அன்பளிப்பும் வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு கற்பித்த ஆசிரியர்களுக்கும் அன்பளிப்புக்கள் வழங்கி வைக்கப்பட்டன. (அ)

# ஐ.நா. சிறுவர் நிதிய உதவியுடன் கற்றல் உபகரணங்கள் வழங்கல்




கல்முனை, ஏப்.29

கல்முனை கல்வி வலயத்தில் பொருளாதர உதவி தேவைப்படும் பாடசாலை மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம் (யுனிசெவ்) உதவியுடன் கற்றல் உபகரணங்கள் வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி வீ. ஜிஹானா ஆலிப், சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளரும், உதவிக்கல்விப் பணிப்பாளருமான என்.எம்.ஏ. மலீக், உதவிக்கல்விப் பணிப் பாளர் யூ.எல்.எம். சாஜீத் மற்றும் ஆசிரிய ஆலோசகர் ஏ. றாஸீக் (முறைசாராக்கல்வி) அத்துடன் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் விழிப்புணர்வு

திருமலை, ஏப். 29

ஏ.எச்.ஆர்.சி நிறுவனத்தின் ஏற்பாட்டில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, சிங்கள மொழி ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களுக்கு திருகோணமலை நகராட்சி மண்டபத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ மற்றும் சட்டத்தரணி சுரேன் பெரேரா ஆகியோர் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

இந்தக் கருத்தரங்கின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் தொடர்பாக ஏ.எச்.ஆர்.சி நிறுவனத்தின் இணைப்பாளர் க.லவகுசராசா விளக்கமளித்தது டன், வளவாளர்களான ருக்கி பெர்னாண்டோ மற்றும் சட்டத்தரணி சுரேன் பெரேரா ஆகியோர் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பிலான விளக்கத்தையும் வழங்கினர். (அ)




# குழந்தை மீது தாக்குதல் தமிழரசு உறுப்பினர் கைது

மட்டக்களப்பு, ஏப்.29

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மற்றும் அவரது இரண்டரை வயது மகள் மீது மிலேசத்தனமாக தாக்குதல் நடத்தியது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் போரதீவுப்பற்று இணைப்பாளர் நேற்று முன் தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

வெல்லாவெளி கலைமகள் வித்தியாலய பாடசாலைக்கு முன்பாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயற்குழு உறுப்பினர் கோபாலன் பிரசாத், அவரது மனைவி மற்றும் குழந்தை ஆகிய மூவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது வழிமறித்து, நேற்று முன் தினம் பிற்பகல் 2.30 மணிக்கு மிலேசத்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த பிரசாத்தின் இரண்டரை வயதுக் குழந்தை படுகாயமடைந்த நிலையில், மண்டூர் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படும் தமிழரசுக் கட்சியின் போரதீவுப்பற்று இணைப்பாளர் வெல்லாவெளி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போரதீவுப்பற்று பிரதேச சபைக்கு போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சம்பவம் தொடர்பாக வெல்லாவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# கல்லடி பாலத்தில் குதித்த பெண்ணின் சடலம் மீட்பு!

மட்டக்களப்பு, ஏப்.29

காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டு கல்லடிப் பாலத்தில் கடந்த 26 ஆம் திகதி தற்கொலை செய்துகொண்ட பெண்ணின் சடலம் நேற்று முன் தினம் கரையொதிங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேயர் வீதி டச்வார் கல்லடி பிரதேசத்தைச் சேர்ந்த (வயது-52) வதுடைய கபிரியல் செபமாலை என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நீண்ட காலமாக நோய்வாய்பட்டிருந்த நிலையில் கடந்த 26 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டவர் மட்டக்களப்பு கல்லடிப் பாலத்திலிருந்து பாய்ந்து தற்கொலை செய்திருந்தார்.

பின்னர் அவரின் சடலம் கல்லடி டச்வார் பிரதேசத்தில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் பீற்றர் போல் உத்தரவுக்கமைவான சம்பவ இடத்திற்குச் சென்ற காத்தான்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி வேலு மணிமாறன் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ரஷ்ய இராணுவம் பெரிதாக உள்ளது!

## அமெரிக்க இராணுவ அதிகாரி கருத்து

நியூயோர்க், ஏப்.

**உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையால் ஆயிரக்கணக்கான வீரர்களை இழந்த போதிலும், படையெடுப்பின் தொடக்கத்தை விட ரஷ்ய இராணுவம் இன்று பெரியதாக உள்ளது என்று அமெரிக்க மூத்த இராணுவத் தளபதி ஒருவர் கூறியுள்ளார்.**

அமெரிக்க ஐரோப்பியக் கட்டளைத் தளபதியான ஜெனரல் கிறிஸ்டோபர் கவோலி கடந்த புதன்கிழமை அமெரிக்க செனட் ஆயுத சேவைக் குழுவிடம், ரஷ்யாவின் ஆயுதக் களஞ்சியத்தில் இன்னும் ஏராளமானபயர்பவர் உள்ளது என்று கூறினார்.

"இந்த மோதலால் ரஷ்ய தரைப்படை ஓரளவு சீரழிந்துள்ளது. இருப்பினும் அது மோதலின் தொடக்கத்தில் இருந்ததை விட இன்று பெரியதாக உள்ளது," என்று அவர் குறிப்பிட்டார்.

காவோலியின் கருத்துக்கள், மேற்கத்திய பொருளாதாரத் தடைகள் காரணமாக பெரும் இழப்புகள் மற்றும் மறு விநியோக நெருக்கடிகள் பற்றிய அறிக்கைகளுக்கு மத்தியிலும் ரஷ்ய படைகளை குறைத்து மதிப்பிடக்கூடாது என்று தெரிவிக்கின்றன.

ரஷ்ய விமானப்படை 80 விமானங்களை மட்டுமே இழந்துள்ளதாகவும் மேலும் 1,000 போர் விமானங்கள் மற்றும் வெடிகுண்டு விமானங்கள் உக்ரைனுக்கு தயாராக இருப்பதாகவும் அமெரிக்க மூத்த தளபதி மேலும் குறிப்பிட்டார்.

இந்த மாத தொடக்கத்தில், உக்ரைனை ஆக்கிரமித்ததில் இருந்து ரஷ்ய இராணுவம் 10,000 கவச வாகனங்களை இழந்துள்ளதாக இங்கிலாந்து உளவுத்துறை அறிக்கை கூறியது.

ரஷ்யா அனைத்து படைகளையும் குவித்துள்ள பக்முட்டைச் சுற்றி நடந்த கடும் சண்டையின் காரணமாக இந்த ஆண்டு 100,000 க்கும் மேற்பட்ட ரஷ்ய துருப்புக்களும் கொல்லப்பட்டனர் என மேற்கு நாடுகள் நம்புகின்றன.

"பக்முட் அருகே அவர்கள் அடிக்கப்படுகிறார்கள், உக்ரேனியர்கள் மிக நன்றாகப் போராடினார்கள்" என்று கூட்டுப் பணியாளர்களின் தலைவர் ஜெனரல் மார்க் மில்லியும் கூறினார்.

எவ்வாறாயினும், இதுவரை பதிவு செய்யப்பட்ட இழப்புகள் ரஷ்யாவின் மொத்த இராணுவ சக்தியின் ஒரு பகுதி மட்டுமே.

கிடைக்கக்கூடிய 544 ரஷ்ய பட்டாலியன்களில் 527 கியேவுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ளதாகவும், 474 ஏற்கனவே உக்ரைனில் இருப்பதாகவும் உளவுத்துறை தெரிவித்துள்ளது.

# தீபாவளியை பொதுவிடுமுறையாக அறிவிக்கும் அமெரிக்க மாகாணம்!

நியூயோர்க், ஏப். 29

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் இனி தீபாவளி பண்டிகையன்று பொது விடுமுறை அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்துகளின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக தீபாவளி கொண்டாடப்படுகிறது.

வாழ்வில் உள்ள தீமைகள் அகன்று, நன்மைகள் பெருகும் பெருநாளாக இந்து மக்களால் இந்த பண்டிகை மதிக்கப்படுகிறது.

மக்கள் புத்தாடை அணிந்து, இனிப்புகளை வழங்கி உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இந்த பண்டிகையை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர்.

இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகளவில் வசிக்கும் இந்து மக்களும், பிற மதத்தினரும் தீபாவளியை கொண்டாடுவது வழக்கம்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகையை வெள்ளை மாளிகையில் வைத்து ஜனாதிபதி ஜோ பைடன் கொண்டாடி இருந்தார்.

இந்தநிலையில், அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் ஆண்டுதோறும் தீபாவளிக்கு பொது விடுமுறை வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



பென்சில்வேனியாவில் தெற்காசியாவைச் சேர்ந்த 2 லட்சம் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் ஆண்டுதோறும் தீபாவளி பண்டிகையை கொண்டாடி வரும் நிலையில், இந்த பண்டிகையை முன்னிட்டு பொது விடுமுறை வழங்குவதற்கான சட்டத்தை அம்மாகாண மேலவையில் செனட்டர்கள் கிரெக் ரோத்மேன் மற்றும் நிகில் சவல் அறிமுகப் படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து இந்த சட்டம் பென்சில்வேனியா மாகாண மேலவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை செனட்டர் நிகில் சவல் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். இதன் மூலம் அங்கு தீபாவளிப் பண்டிகை பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பெரும்பான்மை இல்லாதமையினால் புதிய குடியேற்ற பிரேரணை தாமதம்!

பாரிஸ், ஏப். 29

பிரான்ஸ் அரசு அதன் திருத்தப்பட்ட புதிய குடியேற்றக் கொள்கை அடங்கிய சட்டப் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை ஆண்டின் இறுதிவரை ஒத்திவைத்திருக்கிறது.

பிரேரணையை நிறைவேற்றுவதற்கான அறுதிப் பெரும்பான்மை கிட்டாது என்ற காரணத்தினாலேயே சட்ட மூலத்தைச் சமர்ப்பிப்பதை எதிர்வரும் இலையுதிர்காலப்பகுதிக்கு ஒத்திவைத்திருப்பதாகப் பிரதமர் எலிசபெத் போர்ன் தெரிவித்திருக்கிறார். நாடு பிளவுபட்டுள்ள தருணத்தில் சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்கு இது பொருத்தமான நேரம் அல்ல என்று கூறியுள்ள அவர், புதிய சட்டம் தொடர்பில் வலதுசாரி ரிப்பப்ளிக்கன் கட்சியுடன் ஓர் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்.

குடியேற்றச் சட்ட மூலத்தை ஏப்ரல் - மே மாத காலப் பகுதியில் - வசந்த காலத்தில் - சபையில் சமர்ப்பிப்பது என்று அரசு திட்டமிட்டிருந்தது. ஆனால் வலதுசாரி ரிப்பப்ளிக்கன் கட்சியின் முழுமையான ஆதரவு இன்றி அதனை பாராளுமன்றின் இரு சபைகளிலும் நிறைவேற்றுவதற்கான பெரும்பான்மை பலம் மக்ரோன் அரசுக்குக் கிடையாது. எனவே புதிய சட்ட மூலம் தொடர்பில் வலதுசாரிப் பழமைவாதிகளது ஆதரவை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்கு உள்ளது. இல்லையேல் ஓய்வூதியச் சட்டம் போன்று அதனையும் அரசமைப்பின் விசேட அதிகாரத்தின் மூலம் வாக்கெடுப்பைத் தவிர்த்துவிட்டே நிறைவேற்ற நேரிடும்.

ஓய்வூதியச் சட்டத்தை அவ்வாறு பாராளுமன்ற நடைமுறைக்குப் புறம்பாக நிறைவேற்றியதால் நாட்டில் உருவாகியுள்ள பெரும் கொந்தளிப்பு இன்னமும் அடங்கவில்லை. அதற்குள் மீண்டும் ஒரு தடவை பெரும்பான்மையை நிரூபிக்க முடியாத இக்கட்டில் சிக்குவதற்கு அரசு விரும்பவில்லை. எனவேதான் குடியேற்றச் சட்ட மூலத்தை அரசு தாமதப்படுத்த முடிவு செய்துள்ளது.

சட்டவிரோத குடியேற்றவாசிகளை அவர்களது சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்புவதை விரைவுபடுத்துதல், நாட்டில் ஊழியர் படைக்குப் பற்றாக்குறை காணப்படுகின்ற பல்வேறு தொழில் துறைகளில் பணியாற்றுவோருக்குத் தற்காலிக வதிவிட அனுமதி அளிப்பது உட்படப் பல விதிகள் புதிய குடியேற்றச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ளன. (அ)

# கனடா வாகன திருட்டு வழக்கில் தமிழர்களும் கைது!

ரொரன்றோ, ஏப். 29

கனடாவின் ரொரன்றோ காவல்துறையினர் முன்னெடுத்த வாகன திருட்டு விசாரணையில் 119 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த விசாரணையில் 556 வாகனங்கள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களில் குறைந்தது இரண்டு தமிழர்களும் அடங்குகின்றனர்.

23 வயதான தேஷான் யோகராஜா, 23 வயதான திஷாநாத் சற்குணராஜ் ஆகியோர் கைது செய்யப்பட்ட தமிழர்கள் என காவல்துறையினர் தெரிவித்தனர்.

கைதான சந்தேக நபர்களில் பெரும்பாலானவர்கள் ரொரன்றோ பெரும்பாகத்தை சேர்ந்தவர்கள் என தெரியவருகிறது.

இதில் கைதானவர்கள் மீது 314 குற்றச் சாட்டுகள் பதிவாகியுள்ளன.

இந்த விசாரணையின் விளைவாக இதுவரை மீட்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி 27 மில்லியன் டொலர் எனவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

(அ)

# உக்ரைனின் தலைநகரில் ரஷ்யா வான்வழி தாக்குதல்

கீவ், ஏப். 29

உக்ரைன் தலைநகர் கிவ் உள்ளிட்ட பகுதியில் ரஷ்யா வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல்களில், 3 வயது குழந்தை ஒன்றும், பெண் ஒருவரும் உட்பட ஐவர் கொல்லப்பட்டுள்ளனர்.

9 மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று கடுமையாக சேதமடைந்துள்ளது.

இதேநேரம், ரஷ்யாவின் சில தாக்குதல்களை, யுக்ரைன் படையினர் முறியடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# II பேரை சயனைட் விசம் வைத்து கொன்ற தாய்லாந்து பெண் கைது!



பாங்கொக், ஏப். 29

தாய்லாந்தில் பணத்துக்காக 11 பேரை சயனைட் விசம் வைத்து கொலை செய்த குற்றம் சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் 13 பேருக்கு சயனைட் விசம் கொடுத்துள்ளார். அதில் இருவர் உயிர்தப்பி விட்டனர்.

பல ஆண்டுகளாக நடந்த 11 கொலைகள் தொடர்பாக மூத்த பொலிஸ்காரரை மணந்த சரத் ரங்சிவுதபோர்ன் கடந்த செவ்வாய்கிழமை கைது செய்யப்பட்டார். உயிரிழந்தவர்களில் 9 பேர் பெண்கள்.

கொலைக்கு பணம் தான் காரணம் என்று பொலிஸார் நம்புகிறார்கள் ஆனால் நான்கு மாத கர்ப்பிணியான சரரத் இதற்கு முன்பு மனநல பிரச்சினைகளால் கண்டறியப்பட்டவர் என்று கூறினார்.

2020 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது 11 சந்தேகத்திற்கிடமான மரணங்கள் குறித்து அதிகாரிகள் இப்போது விசாரணை நடத்தி வருவதாக துணை தேசிய காவல்துறைத் தலைவர் சுராசேட் ஹக்பர்ன் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

பாங்காக்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "திட்டமிட்ட கொலைக்கு அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. ஆனால் அவர் தன் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் மறுக்கிறார்" என்றார்.

அதிகாரிகள் அந்த பெண்ணின் வீட்டில் சயனைட் என்று நம்பும் ஒரு பொருளைக் கண்டுபிடித்தனர்.

அவர் பாதிக்கப்பட்டவர்களின் உணவு மற்றும் பானத்தில் விசம் கலந்ததாக சந்தேகிக்கின்றனர்.

சிறையில் வழக்கமான உடல் நலப் பரிசோதனைகளைத் தொடர்ந்து, சரத் நான்கு மாத கர்ப்பமாக இருப்பதாகவும், மன அழுத்தம், மங்கலான கண்கள் மற்றும் தலைவலி ஆகியவற்றை அனுபவித்து வருவதாகவும் சிறைத்துறை வியாழக்கிழமை உறுதிப்படுத்தியது.

புலனாய்வாளர்கள் அவரது பொலிஸ் அதிகாரி கணவர் மற்றும் பிற சாட்சிகளை விசாரணை செய்துள்ளனர். (அ)




## சென்னையை வீழ்த்தி ராஜஸ்தான் மீளெழுச்சி!

ஜெய்ப்பூர், ஏப். 29

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 32 ஓட்டங்களால் வெற்றி கொண்டது ராஜஸ்தான் றோயல்ஸ் அணி. தனது கடைசி இரு போட்டிகளில் தோல்வி கண்ட அந்த அணி இந்த வெற்றியின் மூலம் தளது மீளெழுச்சியை உறுதிப்படுத்தியுள்ளது.

ஜெய்ப்பூரில் நடைபெற்ற இப் போட்டியில் யஷஸ்வி ஜய்ஸ்வால் குவித்த அதிரடி அரைச் சதமும் அடம் ஷம்பாவின் மிகத் துல்லியமான பந்துவீச்சும் ராஜஸ்தான் றோயல்ஸின் வெற்றியில் பிரதான பங்காற்றின.

முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த ராஜஸ்தான் றோயல்ஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 202 ஓட்டங்களைக் குவித்தது. இது இந்த வருட ஐ. பி. எல். போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் பெற்ற அதிகூடிய மொத்த எண்ணிக்கையாகும்.

யஷஸ்வி ஜெய்ஸ்வாலும் ஜோஸ் பட்லரும் 50 பந்துகளில் 86 ஓட்டங்களைப் பகிர்ந்து பலமான ஆரம்பத்தை இட்டுக்கொடுத்தனர். எனினும் பட்லர் (27), அணித் தலைவர் சஞ்சு சாம்சன் (17), யஷஸ்வி ஜய்ஸ்வால், ஷிம்ரன் ஹெட்மேயர் (8) ஆகிய மூவரும் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தனர்.

அவர்களில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய ஜெய்ஸ்வால் 43 பந்துகளில் 8 பெயண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 77 ஓட்டங்களை விளாசினார்.

மத்திய வரிசையில் துருவ் ஜுரெல் 15 பந்துகளில் 34 ஓட்டங்களையும் தேவ்தத் படிக்கல் 13 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் துஷார் தேஷ்பாண்டே 2 விக்கெட்களையும் மஹீஷ் தீக்ஷன ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 170 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

ருத்துராஜ் கெய்க்வாட் (47), டெவன் கொன்வே (8) ஆகிய இருவரும் 42 ஓட்டங்களைப் பகிர்ந்து ஓரளவு நல்ல ஆரம்பத்தை இட்டுக்கொடுத்த போதிலும் சென்னை சுப்பர் கிங்ஸின் ஓட்ட வேகம் போதுமானதாக இருக்கவில்லை.

அத்துடன், அஜின்கியா ரஹானே (15) அம்பதி ராயுடு (0) ஆகிய இருவரும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு நெருக்கடியைக் கொடுத்தது. ஷிவம் டுபேயும் மொயின் அலியும் 5ஆவது விக்கெட்டில் 25 பந்துகளில் 51 ஓட்டங்களைப் பகிர்ந்தபோதிலும் அது வெற்றி இலக்கை எட்டுவதற்கு போதுமானதாக இருக்கவில்லை.

மொயின் அலி 23 ஓட்டங்களைப் பெற்றதுடன் டுபே 33 பந்துகளில் 52 ஓட்டங்களைப் பெற்று கடைசிப் பந்தில் ஆட்டம் இழந்தார். ரவீந்திர ஜடேஜா 23 ஓட்டங்களுடன் ஆட்டம் இழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் அடம் ஷம்பா 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ரவிச்சந்திரன் அஷ்வின் 35 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

### அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட்

# இலங்கை அணி வெற்றியில் சதம்!

காலி, ஏப். 28

அயர்லாந்து அணியை இன்னிங்ஸ் மற்றும் 10 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இலங்கை அணி. இந்த வெற்றி இலங்கை அணியின் 100ஆவது வெற்றியாகும்.



இதேசமயம், அயர்லாந்து அணிக்கு எதிரான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரையும் இலங்கை அணி முழுமையாகக் கைப்பற்றியுள்ளது.

இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக அயர்லாந்து அணி இலங்கை வந்தது. முதல் போட்டியில் இனிங்ஸ் தோல்வியை சந்தித்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடியது.

நேற்றைய தினம் அயர்லாந்து 2ஆவது இன்னிங்ஸை 2 விக்கெட் இழப்புக்கு 52 ஓட்டங்களிலிருந்து தொடர்ந்தது.

ஹெறி டெக்டர் அபாரமாக துடுப்பெடுத்தாடினார். ஆனால், மற்றைய வீரர்கள் அவருக்கு துணை நிற்கவில்லை.

தேநீர் இடைவெளைக்கு சற்று முன்னர் ஹெறி டெக்டரின் விக்கெட்டையும் கடைசி வீரர் பென் வைட்டின் விக்கெட்டையும் அடுத்தடுத்த பந்துகளில் கைப்பற்றிய அசித்த பெர்னாண்டோ இலங்கையின் வெற்றியை உறுதிசெய்தார்.

189 பந்துகளை எதிர்கொண்ட ஹெறி டெக்டர் 8 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 85 ஓட்டங்களைப் பெற்றார். அவரைவிட, அணித் தலைவர் அண்டி பெல்பேர்னி 46 ஓட்டங்களைப் பெற்றார்.

அவர்களைவிட வேறு எந்த அயர்லாந்து துடுப்பாட்ட வீரரும் 20 ஓட்டங்களை எட்டவில்லை.

இலங்கை பந்துவீச்சில் ரமேஷ் மெண்டிஸ் 5 விக்கெட்களையும் அசித்த பெர்னாண்டோ 3 விக்கெட்களையும் பிரபாத் பெர்னாண்டோ 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக, அயர்லாந்து அணி முதல் இன்னிங்ஸில் 492 ஓட்டங்களை குவித்தது. இதில், கேர்ட்டிஸ் கெம்பர் 111, போல் ஸ்டேர்லிங் 103, அண்டி பெல்பேர்னி 95, லோக்கன் டக்கர் 80 ஓட்டங்களை குவித்திருந்தனர்.

இலங்கையின் பந்துவீச்சில் பிரபாத் ஜயசூரிய 5 விக்கெட்கள், அசித்த பெர்னாண்டோ, விஷ்வா பெர்னாண்டோ தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

இலங்கை தனது முதல் இன்னிங்ஸில், 3 விக்கெட்கள் இழப்புக்கு 704 ஓட்டங்களை குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. குசல் மெண்டிஸ் 245, நிஷான் மதுஷ்க 205, திமுத் கருணாரட்ன 115, அஞ்சலோ மெத்யூஸ்100 ஓட்டங் களை ஆட்டமிழக்காமல் பெற்றார். (ஐ)



## பிரபாத் ஜயசூரிய புதிய மைல்கல்!

காலி, ஏப். 29

குறைந்த போட்டிகளில் 50 விக்கெட்களை கைப்பற்றிய இலங்கை வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார் இலங்கையின் பிரபாத் ஜயசூரிய.

அயர்லாந்து அணிக்கு எதிராக நேற்று நிறைவடைந்த டெஸ்ட் போட்டியிலேயே அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

முதலாவது இன்னிங்ஸில் சதம் குவித்த போல் ஸ்டேர்லிங்கின் விக்கெட்டை இரண்டாவது இன்னிங்ஸில் வீழ்த்தியதன் மூலம் இந்த மைல்கல் சாதனையை பிரபாத் ஜயசூரிய நிலைநாட்டினார்.

அவர் 7 போட்டிகளில் 50 விக்கெட்களை வீழ்த்தியதன் மூலம் இந்த சாதனையை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னதாக டில்ருவன் பெரேரா, ரமேஷ் மெண்டிஸ் ஆகியோர் 11 போட்டிகளில் 50 விக்கெட்களை கைப்பற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## விராட் கோலி புதிய சாதனை!

பெங்களூர், ஏப். 29

இருபது - 20 போட்டிகளில் ஒரே மைதானத்தில் அதிக ஓட்டங்களை குவித்த வீரர் என்ற சாதனையை விராட் கோலி படைத்துள்ளார்.

ஐபிஎல் தொடரில் கொல்கத்தாவுக்கு எதிரான போட்டியில் அரைச்சதம் அடித்த விராட் கோலி பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் தான் விளையாடிய இருபது - 20 போட்டிகளில் மட்டும், 3 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார்.

இதன்மூலம் இருபது - 20 போட்டிகளில் ஒரே மைதானத்தில் அதிக ஓட்டங்களை குவித்த வீரர் என்ற சாதனையையும், 20 ஓவர் போட்டிகளில் ஒரே மைதானத்தில் 3 ஆயிரம் ஓட்டங்களை குவித்த முதல் வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

மேலும் நடப்பு ஐ. பி. எல். தொடரில் 300 ஓட்டங்களை கடந்த விராட் கோலி, தொடர்ந்து 14 ஐ. பி. எல். தொடர்களில் 300 ஓட்டங்களை குவித்த ஒரே வீரர் என்ற சாதனையையும் படைத்தார். (ஐ)



# புலம்பெயர் அமைப்புகள் இங்கு முதலிடவேண்டும்!

## ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி கோரிக்கை





யாழ்ப்பாணம், ஏப். 29

**புலம்பெயர் அமைப்புகள் இலங்கையில் முதலீடு செய்து நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுமாறு அனைவரும் ஒன்றிணைந்து கோரிக்கை விடுகிறோம் என ஜனாதிபதி செயலக பணிக்குழாமின் பிரதானியும் ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஆலோசகருமான சாகல ரட்நாயக்க தெரிவித்தார்**

வேலணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற வறிய மக்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ரணில் விக்கிரமசிங்கவின் நெறிப்படுத்தலின் கீழ் வறிய குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி வீதம் வரிய குடும்பங்களுக்கு உதவி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

இது வறிய மக்களுக்கு மிகவும் ஒரு வரப்பிரசாதமான விடயம். அதேபோல விவசாய மக்களுக்கு அதாவது இந்த பெரும்போகத்தின் பின்னர் நெல்லை விற்பனை செய்வதற்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

இலங்கை ராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதோடு பெரும்பாலான இடங்களில் நெல் உற்பத்தியிலும் ஈடுபடுகின்றார்கள்.

இலங்கை ராணுவத்தினரின் விவசாயத் திட்டத்தில் பெரும்போக அறுவடையின் பின்னர் தமது செலவுகளினை கழித்துவிட்டு மிகுதி நெல்லை ஏழை மக்களுக்கு வழங்கத் தயாராக இருப்பதாக இராணுவத் தளபதி ஜனாதிபதிக்கு அறிவித்திருந்தார். அவர்களுடைய விருப்பத்தின்படி இன்றைய தினம் அது மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட யுத்த அழிவுகளுக்கு பின்னர் நாங்கள் கடந்த சில ஆண்டுகளாக வேறு பல பிரச்னைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது. அதாவது கொரோனா நிலை மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்கவேண்டிய ஏற்பட்டது. அதேபோல பொது மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களுக்கும் நாங்கள் முகம் கொடுக்கவேண்டி இருந்தது. அதேபோல பொருட்களைக் கொள்ளவும் செய்ய வரிசைகளில் நிற்கவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

அது வடக்கு, கிழக்கு, தெற்கு மக்கள் என்றல்லாது இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்குமான பிரச்னையாக காணப்பட்டது.

அந்த நேரத்தில்தான் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை முன்னேற்றுவதற்காக ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்றிருந்தார்.

அந்த நேரத்தில் டொலர் பிரச்னை. அதே போல கொள்வனவு செய்வதற்கு நிதி இல்லை. உல்லாசப் பயணிகளின் வருகை குறைவடைந்திருந்தது. அதே போல தொழிற்சாலைகள் இயங்குவதற்கு மின்சாரம் இல்லை. எரிபொருள் இல்லை. அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்க நிதியில்லை. மருந்து பொருட்கள் வாங்க நிதியில்லை போன்ற பல்வேறு பிரச்னைகள் அந்த நேரத்தில் காணப்பட்டன.

மக்கள் வாழ்வதற்கு முடியாத ஒரு நிலை காணப்பட்டது. ஆனால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் நாட்டில் ஏற்பட்ட பிரச்னைகளை தீர்த்து நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதோடு மக்களுக்கான பிரச்னைகளையும் ஒவ்வொன்றாக தீர்க்க நடவடிக்கை எடுத்தார்.

எமது நாட்டைப் போல வேறு பல நாடுகளும் சர்வதேச நாணய நிதியத்திடம் பல கோரிக்கைகளை முன்வைத்து நிதியைப் பெற முடியாத நிலையில் உள்ளார்கள். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டு தற்பொழுது நாடு படிப்படியாக முன்னோக்கிச் செல்கின்றது.

நாங்கள் முன்னோக்க நகர்கின்றோம். ஒரு அடி ஏனும் பின்னோக்கிச் செல்லமாட்டோம் என்ற அடிப்படையில் தற்போது நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் திட்டத்தில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார்.

இந்த வேலை திட்டத்தில் முழு இலங்கையும் உள்ளடங்கப்பட்டுள்ளது.

வட பகுதியில் விவசாயத்தை நவீன மயப்படுத்தி விவசாயத்தை முன்னேற்றி அதேபோல காங்கேசன்துறை துறைமுகத்தை இந்திய நாட்டின் உதவியுடன் அபிவிருத்தி செய்து வர்த்தகத்தை ஏற்படுத்தி வடபகுதியில் சுபீட்சமான நிலை ஏற்படுத்த நாங்கள் முனைகின்றோம்.

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் மூலம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வும் பெற்றுக் கொடுக்கப்படும்.

அதேபோல சமுர்த்தி கிடைக்காத குடும்பங்களும் தமக்கு சமுர்த்தி கிடைக்காமை தொடர்பில் தமது முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும்.

புலம்பெயர் அமைப்புகள் இலங்கையில் முதலீடுகளை செய்து நாட்டு மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்ற ஒத்துழைக்குமாறு தற்போதைய அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

அந்த அழைப்பினை அனைவரும் ஒன்றிணைந்து விடுவோம். இங்கே முதலீடுகளை மேற்கொண்டு பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஒத்துழைக்குமாறு நாம் அனைவரும் சேர்ந்து கோரிக்கை விடுவோம்-என்றார்.

(அ)

# சாகலவுக்கு பொன்னாடை போர்த்தி விழுந்தெழும்பிய கட்சி உறுப்பினர்!

## வேலணை பிரதேச செயலகத்தில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஏப். 29

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரட்நாயக்கவுக்கு பொன்னாடை போர்த்திய பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் மேடையில் இருந்து இறங்கும்போது தடுக்கி வீழ்ந்ததால் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

பெரும்போக நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலங்கை இராணுவத்தின் மேலதிக பங்களிப்புடன் வறிய குடும்பங்களுக்கான இலவச அரிசிப் பொதி வழங்கும் நிகழ்வு என்பன வேலணை பிரதேச செயலகத்தில் நேற்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானி சாகல ரட்நாயக்க உரையாற்றிக்கொண்டிருந்தபோது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் அவருக்கு பொன்னாடை போர்த்திவிட்டு மேடையை விட்டு கீழே இறங்கும்போது தடுக்கி விழுந்தார். இதனால் சிறிது நேரம் நிகழ்வில் சலசலப்பு ஏற்பட்டது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பியூம் பாஸ்குவல், இலங்கை இராணுவத் தளபதி விக்கும் லியனகே, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ. சிவபாலசுந்தரம், வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்,வடபகுதி கடற்படை கட்டளை அதிகாரி, இலங்கை இராணுவத்தின் 51 ஆவது கட்டளைத் தளபதி, வேலணை பிரதேச செயலர் உள்ளிட்ட அதிகாரிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# கோழி இறைச்சி, முட்டை விலை இரு வாரங்களில் குறைவடையும்!

கொழும்பு, ஏப். 29

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலை குறையுமென அகில இலங்கை கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்தார்.

கால்நடை உணவுப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாகவே இந்தச் சலுகையை வழங்க முடிவு செய்யத்துள்ளோம் எனவும் அவர் கூறினார்.

அகில இலங்கை கோழிப்பண்ணையாளர்கள் சங்கம் கடந்த புதன்கிழமை அரச உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தியது. நீண்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து, தேவையான கால்நடை உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யவும் விலையை குறைக்கவும் அரசாங்கம் உத்தரவாதம் வழங்கியது.

கால்நடை உணவுகள் குறைந்த விலையில் கிடைத்தால், அந்த நன்மை மக்களுக்கே கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# அரச ஊழியர்களான வேட்பாளர்களுக்கு முறையாக சம்பளத்தை வழங்கவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சபையில் கோரிக்கை

கொழும்பு, ஏப். 29

அரச சேவையில் இருந்து தற்காலிக விடுப்பு நிமித்தம் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் சம்பளம் வழங்கப்படுமென துறைக்குப் பொறுப்பான அமைச்சர் முன்னர் தெரிவித்திருந்தாலும், இன்றுவரை குறித்த சம்பளம் வழங்கப்படவில்லை எனவும்,எனவே அரசாங்கம் நேரடியாக முடிவெடுத்து இந்த வேட்பாளர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க முடியாத காரணத்தை கூறவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- அரசாங்கம் தற்போது தேர்தலை நடத்துவதா அல்லது இல்லையா என்று யோசித்துக் கொண்டு இருப்பதால்,இந்த வேட்பாளர்கள் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை முறையாகப் பெறுவதில்லை என்பது பாரதூரமான விடயமாகும். அவர்களின் தவறினால் இந்த சம்பளம் இழக்கப்படவில்லை. அரசாங்கம் தேர்தலை எதிர்கொள்ளப் பயந்த காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இது அரசியல் ரீதியிலான பிரச்னையல்ல. தேர்தலுக்கு பணம் ஒதுக்குவதை அரசாங்கம் தவிர்த்துள்ளதால் தேர்தல் நிறுத்தப்பட்டுள்து. தேர்தலை நடத்தாவிட்டால் அரச ஊழியர்களை மேலும் நிர்க்கதிக்குள்ளாக்காமல் இந்த வேட்பாளர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை உரியவாறு வழங்க வேண்டும்-என்றார்.

(அ)

## சிலைகள்...

அதில் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

"வெடுக்குநாறிமலை சைவச் சிலைகள் மீளமைப்புக்கு மதமாற்ற சட்டத்தரணி காரணம் அல்ல

"26.03.2023 அன்று நண்பகல் சைவச் சிலைகளை உடைத்தார்கள். அன்று மாலை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீதி சந்தியில் 25 சிவசேனை தொண்டர்கள் போராட்டம் நடத்தினர். அன்றிரவு, ஜனாதிபதியின் சகோதரர் சன்னா விக்கிரமசிங்க தொலைபேசி வழியே என்னை தொடர்பு கொண்டார். அவரிடம் சிலைகள் உடைப்புக்கு அரசே பொறுப்பு, அவற்றை மீளவும் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன்.

இதன்போது, "உங்கள் கோரிக்கை நீதியானது. இருந்ததை இருந்தவாறே அரசு அமைத்துத் தரும் துயரத்தைச் சைவர்களே விடுங்கள். அமைதியாக இருங்கள்.", என்று உறுதியளித்தார்.

இதைத் தொடர்ந்து தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா ஜனாதிபதியிடம் பேசினார். இருந்ததை இருந்தவாறே அரசு அமைத்துக் கொடுக்கும் என அவரிடம் உறுதியளித்தார். இதன் பின்னர் அமைச்சரவையிலும் இது விடயம் குறித்து பேசப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதனிடையே, எனது (சச்சிதானந்தன்) முயற்சியால் இந்தியாவில் ஹிந்தி, ஆங்கிலம், தமிழ், மராத்தி மொழி பத்திரிகைகளில் ஆலய விக்கிரகங்கள் உடைப்பு செய்தி தலைப்பு செய்திகளாக வெளிவந்தன. இதையடுத்து, இந்திய தூதரகமும் கவனம் செலுத்தியது. ஆலய தரப்பினரை அழைத்தும் பேசியது. இதையடுத்து இலங்கை அரசின் நீதியான நிலைப்பாடும் இந்தியாவுக்கு தெரிவிக்கப்பட்டது.

நீதமன்றத்தில் முன்னர் இருந்த வழக்குகளை தொடர்ந்து இந்த வழக்கும் விசாரிக்கப்பட்டது.

வழக்கு விசாரணையின்போது அரச தரப்பு வழக்கறிஞரிடம் வெடுக்குநாறியில் பூசை வழிபாடு நடத்தவும், விக்கிரகங்களை மீள அமைக்கவும் ஒப்புக்கொள்ளுமாறும் அரசாங்கம் ஆணை வழங்கியது. இதைத் தொடர்ந்தே விசாரணைகளில் பூசை வழிபாட்டுக்கு, விக்கிரகங்கள் மீள பிரதிஷ்டை செய்யவும் அரச தரப்பு வழக்கறிஞர் ஒப்புக்கொண்டார். இதைத் தொடர்ந்து நீதிபதி தடைகளை நீக்கி கட்டளை பிறப்பித்தார் - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "மத மாற்றச் சபைகளின் நன்மையைத் தன் தலையாய நன்மையாகக் கருதும் சட்டத்தரணி, திருக்கேதீச்சர வளைவு வழக்கு, கன்னியா நீரூற்று அத்துமீறல் வழக்கு சண்முக வித்தியாலய உடை வழக்கு, பண்ணைச் சிலை வழக்கு எனச் சைவர்கள் சார்ந்த வழக்குகளில் மதமாற்றச் சபைகளின் சட்டத்தரணி, சைவர்களின் நன்மையைப் பேணாது வழக்குகளை இழுத்தடிக்கிறார். இவ் வழக்குகளில் தாமே நீதிமன்றச் சார்பாளராவார் என நுழைந்து கோருகிறார்.

"இயேசு பிரான் சொன்னார். மலையுரையில் சொன்னார். ஆட்டுத் தோல் போர்த்த ஓநாய்கள் ஆட்டு மந்தைக்குள் நுழைவார்கள். விழிப்பாக இருங்கள். அவர்களை அகற்றுங்கள் என.

சைவர்களின் வழக்குகளில் மூக்கை நுழைத்து, ஆட்டு தோல் போர்த்த ஓநாயாக, சைவத் தோல் போர்த்த மத மாற்றச் சபைச் சட்டத்தரணியாக, வெடுக்குநாறி மலை வழக்கில் தனது முயற்சியே வெற்றியைத் தந்துள்ளதாகக் கூறுகிறார்.

"சைவ உலகத்தின் தொடர்ச்சியான போராட்டங்கள், அவற்றை நீதியாகக் கண்ட அரசு, வட இந்திய இந்து அமைப்புகள் வழியாக இந்திய அரசு தூதரகமும் தலையீடு, நீதிமன்றம் வழியாக வழங்கிய தீர்ப்பு இவையே வெடுக்குநாறி மலையில் சைவச் சிலைகள் மீளமைப்புக்குக் காரணம்" - என்றுள்ளது.

## 33 வீதமான....

வரையான காலப் பகுதியில் நாடு முழுவதையும் உள்ளடக்கும் விதத்தில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் ஊடாக இது தெரியவந்திருப்பதாகவும் 4 இலட்சத்து 49ஆயிரத்து 979 குடும்பங்கள் சமுர்த்தி பயனாளிகளிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், இந்த சமுர்த்தி பயனாளிகளைத் தேர்வுசெய்யும்போது முறைகேடு இடம்பெற்றிருப்பது தெரியவந்திருப்பதாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமுர்த்தி திணைக்களத்தின் 2019, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் செயலாற்றுகை அறிக்கை குறித்து ஆராயும் நோக்கில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தலைமையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே இந்த விடயங்கள் தெரியவந்தன.

அத்துடன், சமுதாயம் சார் வங்கிகளில் மாதாந்தம் செலுத்தப்படும் சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவுத் தொகை சில சமுர்த்திப் பயனாளிகளால் மாதாந்தம் பெறப்படாமல் நீண்டகாலம் வங்கிக் கணக்குகளில் அவை காணப்படுவதாகவும், சமுதாயம் சார் வங்கிப் பிரிவுகள் 10இல் உள்ள 41 வங்கிகளில் 2,433 சமுர்த்திப் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் இவ்வாறு தேங்கிக்கிடந்த பணத்தின் தொகை 5 கோடியே 99 இலட்சத்து 51 ஆயிரத்து 237 ரூபாய் என்றும் தெரியவந்தது. (ஐ)

## திருத்தங்களின்...

அமைய விரிவான பேச்சுடன் - ஏற்றுக்கொள் எக்கூடிய திருத்தங்களுடன் சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். இது விடயத்தில் அவசரப்பட போவதில்லை என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் மீதான விவாதத்திலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மக்களை முடக்குவதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது என்ற தவறான நிலைப்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அமுல்படுத்தும் போது எழும் மக்கள் போராட்டத்தை அடக்குவதற்காக இந்த சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்படுகிறது.

உண்மையான நோக்கத்துடன் இந்த சட்டமூலம் 2015 ஆம் ஆண்டு வரையப்பட்டு, 2018ஆம் ஆண்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது. நடைமுறைக்கு சாத்தியமான ஒரு சில திருத்தங்கள் உள்ளடக்கிய வகையில் சட்டமூலம் தற்போது வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையிலான சட்டமூலத்தை தயாரிக்கவில்லை. அவ்வாறான சட்டமூலத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க போவதுமில்லை. நாட்டு மக்களின் தேவைகளுக்காகவே பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்படுகின்றன.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் விரிவாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் என பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியதால் சட்டமூலத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவில்லை. இந்த சட்டமூலம் தொடர்பான திருத்த யோசனைகளை எவரும் எழுத்து மூலமாக என்னிடம் சமர்ப்பிக்கலாம் அல்லது நேரடியாக பேச்சில் ஈடுபடலாம். திருத்தங்களின் பின்னர் இந்தச் சட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## காணாமல்....

கும் திட்டம் ஒன்றில் பங்கேற்றார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தற்போதைய அரசாங்கத்தால் வட பகுதியில் விவசாயத்தை நவீனமயப்படுத்தி விவசாயத்தை முன்னேற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் கூறினார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 10இல்)

## வெடுக்குநாறி...

பிரதிஷ்டை செய்வதற்கான விக்கிரகங்களை வாகனங்களில் கொண்டு செல்ல முடியாத நிலையில் அவற்றை பக்தர்கள் தமது தோள்களில் சுமந்தவாறு குன்றின் மீது கொண்டு வந்து சேர்த்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பௌத்த தொல்லியல் இடம் என்று கூறி தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கடந்த மார்ச் 26ஆம் திகதி இனந்தெரியாதவர்களால் விக்கிரகங்கள் உடைத்து எறியப்பட்டன. அத்துடன், சில சிலைகளும் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

இந்த நிலையில், உடைக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு பதிலாக புதிய விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வதற்கு ஆலய நிர்வாகம் முயன்ற நிலையில் தொல்பொருள் திணைக்களத்தால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது. இதன்போது, மூவர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில், இந்த ஆலயத்தில் பூசை வழிபாடுகள் தொல்பொருள் திணைக்களத்தால் தடுக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் வவுனியா நீதிமன்றில் முன்னரே வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை நடந்த வழக்கில் பூசை, வழிபாட்டை தடுக்க யாருக்கும் உரிமை இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த வழக்கில் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வதற்கு தொல்பொருள் திணைக்களம் ஆட்சேபனை தெரிவித்திருக்கவில்லை. இதையடுத்து, விக்கிரகங்களை மீளவும் பிரதிஷ்டை செய்வதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது. இதையடுத்து, நேற்றைய தினம் விக்கிரகங்கள் மீள பிரதிஷ்டை செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## 13ஆம் திருத்த...

இந்திய தூதரகத்தின் அழைப்பின் பேரில் கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று நடந்த சந்திப்பிலேயே இந்த உறுதிமொழியை இந்தியத் தூதுவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் வழங்கியிருந்தார்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்த சந்திப்பின்போது, வடக்கு, கிழக்கில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் நில மற்றும் தமிழர் மரபுரிமை ஆக்கிரமிப்புகள் உள்ளிட்ட பிரச்னைகள், தமிழ்க் கட்சிகள் இந்திய அதிகார பீடத்தினரை சந்திப்பதற்கான கோரிக்கை தொடர்பான பரிசீலிப்புகள் என்பன குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன என்று அறிய வருகின்றது.

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் சுரேஷ் பிறேமசந்திரன், கு. சுரேந்திரன் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

இதேபோன்று இந்திய தரப்பில், தூதுவர் கோபால் பாக்லே, பிரதித் தூதுவர், அரசியல் விவகாரங்களுக்கான செயலர் பஸ்ரியன் ஷகோ ஆகியோர் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசியலுக்கு

போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பல்வேறு காரணிகளால் நாடு என்ற ரீதியில் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளோம். அதனால் முழு நாடும் ஸ்தம்பிதமடைந்திருந்தது.

இந்நிலையில் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனூடாக தற்போது நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு முடியுமாக உள்ளது. இந்த விடயத்தில் அனைவரின் ஒத்துழைப்புகளும் அவசியமாகும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## ஐயரை...

கொள்ளை நடந்த வீட்டில், ஐயர் அவரின் மனைவி, முதியவரான அவரின் உறவினர் என மூவர் உறங்கிக் கொண்டிருந்தனர். அதிகாலை வேளை யன்னல் கம்பியை வெட்டி இறங்கிய இரு கொள்ளையர்கள் ஐயரின் மனைவியையும், அவரின் முதியவரான உறவினரையும் கட்டி வைத்துவிட்டு ஐயரை தாக்கியுள்ளனர்.

இதில், ஐயர் அந்த இடத்திலேயே விழுந்து மரணமானார். இதையடுத்து அங்கிருந்து 15 பவுண் நகைகள், சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பணம் என்பவற்றை கொள்ளையிட்டவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

கொள்ளையர்கள் முகத்தை மறைத்தவாறு வாள், கொட்டன்களுடன் வந்தனர் என்று விசாரணையில் தெரிய வந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலை மற்றும் கொள்ளை சம்பவம் சிலாவத்தை பகுதி மக்கள் மத்தியில் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## கோட்டாபய...

செயலர் கொடுப்பனவுகளுக்காக 9 இலட்சத்து 91 ஆயிரம் செலவிடப்பட்டது.

மேலும், தொலைபேசி, மின்சாரம், தண்ணீர் மற்றும் இதர செலவுகளுக்கு 3 இலட்சத்து 38 ஆயிரத்து 387 ரூபாய் 60 சதம் செலவிடப்பட்டது.

எவ்வாறாயினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது பயன்படுத்தும் வாகனங்கள் குறித்த விவரங்களை ஜனாதிபதி செயலகம் இது வரை வெளியிடவில்லை.

ஜனாதிபதி செயலகத்திடம் விடுத்த தகவல் அறியும் உரிமைக் கோரிக்கையின் பதிலில் இந்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன என்றும் அந்த இணையத் தளம் தெரிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த ஆண்டு ஜூலையில் பதவியை ராஜினாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐ. எம். எவ்....

தேவைப்படுகின்ற சகல அங்கீகாரமும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டுமென முன்வைக்கப்பட்ட தீர்மானம் மீதான 3 நாள் விவாதத்தை கடந்த புதன்கிழமை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்து வைத்தார்.

இந்நிலையில் நேற்று 3ஆவது நாள் பிரேரணை மீது காரசாரமான விவாதங்கள் இடம்பெற்று மாலை 6.20 மணியளவில் முடிவுற்றது.

சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, தீர்மானத்தை சபை அனுமதிக்கின்றதா என கேட்டபோது, தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரகுமார திஸநாயக்க வாக்கெடுப்பைக் கோரினார்.

தொடர்ந்து, இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் தீர்மானத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 25 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 95 மேலதிக வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஈழநாடு
Eelanadu




## முல்லைத்தீவைச் சேர்ந்த 7 பேர் தமிழகத்தில் தஞ்சம்

சென்னை, ஏப். 29

இலங்கையில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர்.

மன்னாரில் இருந்து கடல் வழியாக படகு மூலம் பயணித்து இந்திய ஆளுகையில் உள்ள தீடையில் இறங்கிய குடும்பத்தை அவதானித்த தமிழக மீனவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பொலிஸார் கரையோர காவல் படையினருக்கு தகவல் வழங்கியதையடுத்து தீடைக்குச் சென்ற கரையோர காவல் படையினர் ஏழு பேரையும் மீட்டு கரைக்குக் கொண்டு சென்றனர்.

இவ்வாறு தமிழகத்திற்குச் சென்ற ஏழு பேரும் முல்லைத்தீவு தீர்த்தக்கரையைச் சேர்ந்தவர்கள் எனவும் கணவன், மனைவி மற்றும் ஐந்து பிள்ளைகள் இவர்களில் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
01 - 05 - 1937



இறைவன் அடியில்
26 - 04 - 2023

### திருமதி மகேஸ்வரி இரத்தினசபாபதி

யாழ். சுருவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வதிவிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி இரத்தினசபாபதி அவர்கள் 26.04.2023 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி அவர்களின் பாசமிகு மனைவியும், லீலாவதி, ஜெயநாயகி, காலஞ்சென்றவர்களான ராசநாயகம், தவபாலசிங்கம் ஆகியோரின் அருமை சகோதரியும், ரஜனி, விஜயசேகரன், வரதசேகரன், வாகினி, Dr.சிவசேகரன், சாயிலதா (பிரித்தானியா) , நளாயினி(சூட்டி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நித்தியானந்தன், செல்வமலர், விஜிதா, சிவகரன், லேகா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற பூபாலசிங்கம், பத்மநாதபிள்ளை, விமலாதேவி, காலஞ்சென்ற பொன்னையா, சந்திரவதனா ஆகியோரின் மைத்துனியும், றஜீவன், காண்டீபன், மயூரன், ஜிந்துயா, காயத்திரி, அகல்யா, பிரித்தீப், Dr.சுவேதிகா, Dr.ஹரீஷ், அகிம்சன், அக்சயன், சகானா, ஆஹாஸ், ஆதவன், அனோஜ், ஆரணி, கிருத்திகா, ராகினி, சங்கீதா, Dr.நிரோசாந், பிரதீபராஜ், கௌசிகா, ஸ்ரீதாஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதித்தியன், அஞ்சனா, அர்ஜுன், அகிலன், உருத்திராதேவா, திருவ், அமராஸ்ரீதேவி , ஆகனா சகாதேவி ஆகியோரின் அருமை பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 30.04.2023 அன்று காலை 9.30 முதல் 12.00 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

# சிறந்த தலைவருக்கு நாம் என்றும் ஆதரவு

## மகிந்த ராஜபக்ஷ உறுதி

கொழும்பு, ஏப். 29

சிறந்த தலைவருக்கு நாம் எப்போதும் ஆதரவு வழங்குவோம் என்று பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டிக்கு நேற்று பயணம் மேற்கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஷ, தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அதன்பின்னர் ஊடகங்களிடம் அவர் கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

“மக்கள் பிரச்னைகளை அறிந்து அவற்றுக்குத் தீர்வை வழங்கக் கூடிய எந்தவொரு நபருக்கும் நாம் ஆதரவு வழங்குவோம்” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



‘பிரதமர் பதவியை மீண்டும் எப்போது பொறுப்பேற்கவுள்ளீர்கள்?’ என்ற கேள்விக்கு அவர் நேரடிப் பதில் எதனையும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நாணய நிதியத்தின் உடன்பாட்டை பாராளுமன்றில் முன்வையுங்கள்!

## லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை

கொழும்பு, ஏப். 29

சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படாத நிலையில், நீடிக்கப்பட்ட கடன் சலுகையின் கீழ் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மாத்திரம் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளையே தாம் கோருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அவைத்தலைவர் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொடர்பில் கருத்துரைக்கின்றபோதிலும், இதுவரையில் ஒப்பந்தம் சபைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் முன்வைக்கப்பட்ட கோரிக்கை அடங்கிய கோவையே பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ளது.

முன்வைக்கப்படவேண்டிய ஒப்பந்தம் இதுவரை முன்வைக்கப்படவில்லை.

ஒப்பந்தம் சபையில் சமர்ப்பிக்கப்படாத நிலையிலேயே நாங்கள் வாதப்பிரதிவாதங்களை நடத்துவதற்காக ஒன்று கூடியுள்ளோம்.

ஜனாதிபதியிடம் நாங்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்திருக்கின்றோம்.

எனினும் இதுவரை சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தமோ, அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அடங்கிய ஆவணமோ இதுவரை சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை-என்றார். (அ)

## வசந்த கரன்னகொடவை போன்றே ஏனையோரும் அவதானிக்கப்படுவர்

### அமெரிக்கத் தூதரகம் கூறுகின்றது

கொழும்பு, ஏப். 29

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் மேலும் இலங்கை அதிகாரிகளுக்கு அமெரிக்காவினால் தடை விதிக்கப்படுமா? என்ற கேள்விக்கு இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் பதில் வழங்கியுள்ளது.

ஆங்கில ஊடகம் ஒன்று எழுப்பிய இந்த கேள்விக்கு பதிலளித்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளார், ஒருவர், கொழும்பில் உள்ள தூதரகம், மற்றும் வெளிவிவகாரத் திணைக்களம் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் இவ்வாறான விடயங்களை மீளாய்வு செய்து வருவதாக குறிப்பிட்டார்.

அத்துடன் உலகளவில் இடம்பெறுகின்ற செயற்பாடு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ள நிலையிலேயே இந்த விடயத்தை அமெரிக்கத் தூதரகம் வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியையும், மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்களுக்கான பொறுப்புக்கூறலையும் மேம்படுத்துவதற்கு அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது என்றும் அமெரிக்க தூதரகப் பேச்சாளார் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் காரணமாக இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் இருதரப்பு உறவுகளில் பாதிப்பு ஏற்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு சீர்திருத்தத்தை ஊக்குவித்தல் உட்பட நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதில் இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்கா இணைந்து பணியாற்றுகிறது என்றும் அவர் கூறியுள்ளார். (அ)



## தெல்லிப்பழையில் வறுமையான 500 குடும்பங்களுக்கு இலவச அரிசி

யாழ்ப்பாணம், ஏப். 29

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழுள்ள 500 குடும்பங்களுக்கு, இரண்டாம் கட்டமாக இலவச அரிசி வழக்கு நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில், பிரதேச செயலரின் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட 500 குடும்பங்களுக்கு இவ்வாறு அரிசிப் பொதிகள் வழங்கப்பட்டன.

தெல்லிப்பழையில் மொத்தமாக பத்தாயிரம் குடும்பங்களுக்கு இவ்வாறு அரிசிப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்த இந்நிகழ்வில், யாழ். அரசாங்க அதிபர் சிவபாதசுந்தரன், மகளிர், சிறுவர் மற்றும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு விவகாரங்களுக்கான ஆலோசகருமான சாகல ரட்நாயக்க, இராணுவத் தளபதி எச்.எல்.ஆர்.எம். லியனகே, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேயர் ஜெனரல் போதொட்ட, வட பிராந்திய கடற்படை கட்டளைத் தளபதி தென்னக்கோன், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் குணரத்ன, யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனவிரத்ன, பதவி நிலை அதிகாரிகள், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.